பக்கங்கள்: பதினாறு+II=18

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 1 திங்கட்கிழமை (17.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 264

# அடை மழை ஆரம்பிக்கு முன்னர் அகதிகளைக் குடியேற்றுங்கள்!

## அரசிடம் அவசர கோரிக்கை விடுக்கிறார் ரணில்



கொழும்பு, ஒகஸ்ட் 17

இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகப்போகும் பருவமழைக்கு முன்பாக வவு னியா அகதி முகாம்களில் உள்ள மக்கள் அனைவரையும் மீளக்குடியமர்த்தி முடிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தப் பணியை இப்போதே செய்யாவிட்டால், இனிவரப்போகும் அடை மழைக்காலத்தில் அகதிகள் பெரும் விபரீதங்களை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (16 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச்சுடர்

**உள்ளே**

★தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக நடத் தப்படும் விசேட பயிற்சிப் பரீட்சையில் குரு நாகல் பிரபல ஆசிரியர் தயாரித்து வழங்கும் விசேட மாதிரி வினாத்தாள்.

**நாளை**

★தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக நடத் தப்படும் விசேட பயிற்சிப் பரீட்சையில் வவுனியா பிரபல ஆசிரியர்கள் தயாரித்து வழங்கும் விசேட மாதிரி வினாத்தாள்.

## 2 நாள்களாக உணவு, குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டது

# தாழ்ந்த பிரதேசக் கூடாரங்களில் தங்கியிருந்த அகதிகள் அனைவரும் செட்டிகுளம் மகாவித்தியாலயத்துக்கு

## முகாம்கள்ருக்கு வெளியே உள்ள பாடசாலைகளுக்கு மாற்றும் முயற்சி தோல்வி

வவுனியா, ஒக.17

வவுனியாவில் நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் அகதி மக்கள் பெரும் அவலத்துக்குள்ளாகி உள்ளனர்.

நேற்றுக் காலையிலும் பின்னர் மாலையிலும் தொடர்ச்சியாகப் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக தாழ்ந்த பிரதேசங்களில் அமைக்கப்பட்ட கூடாரங்களில் தங்கியிருந்த சகலரும் இடம்பெயர்ந்துள்ளனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசத்தி ஆனந்தன் உதயனுக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

நோய்வாய்ப்பட்டிருந்த (16 ஆம் பக்கம் பார்க்க)



கடந்த சில தினங்களாக வவுனியாவில் பெய்த மழை காரணமாக அங்குள்ள அகதிமுகாம் ஒன்றில் வெள்ளம் தேங்கி நிற்பதை இங்கு காணலாம்.

# அகதிகளின் மீள்குடியேற்றத்துக்கு கால வரையறை எதுவும் விதிக்க முடியாது

## அனர்த்த நிவாரண அமைச்சு தகவல்

கொழும்பு,ஒக. 17

நிலக்கண்ணி வெடிகள் முற்றாக அகற்றப் பட்டு விட்டன என்று உறுதிப்படுத்தப்படும் வரை மீள் குடியேற்ற நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடி யாது என்று மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

ஆகவே,வன்னி முகாம்களில் தங்க வைக்கப் பட்டிருக்கும் அகதிகள் எப்போது மீள்குடியேற்றப் படுவார்கள் காலவரையறை எதுவும் கூறமுடியாது என்றும் (16 ஆம் பக்கம் பார்க்க)

# முகாம்களிலுள்ள தமிழர்களின் மீள் குடியமர்வை துரிதப்படுத்தக் கோருகிறது தமிழ்க் கூட்டமைப்பு

## பஸிலுடன் நேற்று தொலைபேசியில் பேசினார் மாவை எம்.பி.

கொழும்பு, ஒக. 17

வன்னி முகாம்களில் தங்க வைக்கப் பட் டுள்ள தமிழ் அகதிகளை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்து வதற்கு அரசு அனுமதிக்க வேண்டும். இல் லாவிடின் அவர்களது உறவினர்கள் அல்லது நண்பர்களின் வீடுகளில் தங்கியிருப் பதற்கு அனுமதிக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு அரசிடம் வேண்டுகோள் விடுத் துள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு

# நாளை முதல் நான்கு நாள்களுக்கு இரவு நேர ஊரடங்கை முற்றாக நீக்க வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 17

நல்லூர் பெருந்திருவிழாவில் முக்கிய திருவிழாக்கள் நடைபெற உள்ளதை முன்னிட்டு நாளை 18 ஆம் திகதி தொடக் கம் 21 ஆம் திகதிவரையான நான்கு நாள்க ளுக்கு இரவு நேர ஊரடங்கை முழுமை யாக நீக்குமாறு கோரப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந் தக் கோரிக்கையை யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.பி.டி.சில்வா (16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் தற்போதைய நிலைவரம் பற்றி அமெ.உயர் இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

நியுயோர்க், ஒக. 17

இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் அமெரிக்க உயர் இராஜதந்திரி களுக்கு, இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமதுங்க விளக்கமளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு, தெற்கு மற்றும் மத்திய ஆசிய வெளிவிவகார உறவுகளுக்கான அமெரிக்க செனட் சபையின் உறுப்பினர் ரொபர்ட் கேசியை சந்தித்து அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார் என அறியவந்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு தோற் கடிக்கப்பட்டதன் பின்னர் வடக்கில் ஏற் படுத்தப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# கே.பி. மீது வழக்குத் தொடர தயாராகிறது அரசுத் தரப்பு

## நூறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுமாம்



கொழும்பு, ஒக.17

கே.பிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன் றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரியவருகிறது.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அடங்கிய பத்திரம் ஓரிரு மாதங்களில் தாக்கல் செய்யப்படும் என் றும் தெரிவிக்கப்படுகிறது.

கே.பிக்கு எதிராக சுமார் நூறு குற்றச் சாட்டுகள் கொண்ட குற்றப்பத்திரம் தாக் கல் செய்யப்படும் என்றும், அதில் தேசத்து (16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MEDICAL/SALE REPRESENTATIVE

மேலே குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கையின் மருந்து வியாபாரத்தில் மிக முன்னணி நிறுவனமான EMERCHEMIE NB (CEYLON) Ltd மிருந்து கோரப்பட்டுள்ளது G.C.E. (O/L, A/L) விஞ்ஞானம், ஆங்கில பாடத்தில் சித்திபெற்று, ஆங்கிலம் பேசக்கூடியவர்கள் தேவை.

யாழ். குடாநாட்டில் எம்மால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு ஏக முகவராகிய (WESCO) யாழ்.மருந்தகம் நீண்டகாலமாக இயங்குகின்றது.

உங்கள் சுயவிவரங்களுடன் புகைப்படத்தையும் இணைத்து 21.08.2009 க்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

**யாழ்.மருந்தகம் (WESCO)**
470 (250), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 3188



## கூறுவிலை கோரல்

வேலை விபரம்:-
கோப்பாய் வெள்ளெருவை விநாயகரின் தேர் இருப்பிடத்துக்கான இருபக்கங்களின் கதவுகள் அமைத்தல்.

கதவுகளின் நீள, அகலம்:-
*21 அடி, 18 அடி*

கோரம் ஏற்கப்படும் இறுதித் திகதி:-
05.09.2009

அனுப்ப வேண்டிய முகவரி:-
திரு.அ.சுப்பிரமணியம்
இளைப்பாறிய அதிபர்,
கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்

*(மேற்படி ஆலய தேர் இருப்பிடத்தைப் பார்வையிட்டுப் பெறுமதி விவரம் அனுப்பவும்).*

**தேர்த் திருப்பணிச்சபை.**


## முத்தான நினைவுகளுடன் முதலாம் ஆண்டில்

| மண்ணின் முத்தாய் | | விண்ணின் சொத்தாய் |
|---|---|---|
| 08 |  | 27 |
| ★ | | ★ |
| 10 | | 08 |
| ★ | | ★ |
| 1933 | | 2008 |

**திருமதி முத்தம்மா சின்னத்துரை**

மண்ணின் முத்தாய் தரணியில் தாயாய்
எங்களின் உறவாய் சீர்பெறு சிவகாமியாய்
நம்மை நன்றாய் நலம் வாழ வைத்தாய்
ஏன் பிரிந்தாய் உன் உறவுகளை வருத்திவிட்டு
தத்துவங்கள் சிதைந்தாலும் வரலாறுகள்
மறைந்தாலும்
எங்கள் நெஞ்சமும், அன்பும் உங்களுடனேயே.

என்றென்றும் உங்கள்
முத்தான நினைவுகளுடன்:
கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கைதடி வடக்கு, கைதடி.

*மாசுவன் சந்தி,*
*நீர்வேலி மேற்கு,*
*நீர்வேலி.*

## இலக்கிய ஒன்றுகூடல்

வடமராட்சி, ஓக.17

அகில இலங்கை கலை இலக்கிய சங்கம் நடத்தும் இலக்கிய ஒன்றுகூடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத்தலைவர் கலாநிதி செ.யோகராசா 'கிழக்குப் பிரதேசத்தின் அண்மைக்கால இலக்கியச் செல் நெறி' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார். (1-236)

## தையல் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 17

வல்வெட்டித்துறை, நெடியகாடு கண பதி படிப்பகத்தின் ஏற்பாட்டில் ஐசிங் கேக், தையல் ஆகியவற்றின் கண்காட்சி இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க் கிழமையும் முற்பகல் 10 மணிக்கு வல்வை மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கணபதி படிப்பகம் உபதலைவர் செல்வன் ச.பிரதீபன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில், 'கோல்ட் ஒன்' சிறுவர்கள் நிறுவனத் தலைவர் டாக்டர் வி.ஆனந்தகுமார், 'கோல்ட் ஒன்' சிறுவர் கள் நிறுவன நிர்வாக இயக்குநர் திருமதி யசிந்தா அன்ரன் ஆகியோர் பிரதம விருந் தினராகக் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் திருமதி தி.சாந்தினி, யாழ்.வல்வை மகளிர் மகா வித்தியாலய அதிபர் திருமதி கு.நகுலாம் பிகை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக வும் பங்குபற்றுவர். (1-204)


இறுதி நேரத்தில்
உறுதியான சில
விடயங்களினை
உங்களோடு பகிர..
நாளை.. (18.08.2009)
8.30
நடைமுறை
வணிகக் கருத்தரங்கு
By.S.யாசோ
யூனிவேர்சல்
Note:-வெளிமாணவர்களும் பங்குபற்ற முடியும்.



**படிவம்**

வார இறுதி ஆசிரியர் கல்விப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.



**திருமணக் கார் வாடகைக்கு உண்டு**

AC,NON.AC வசதி கொண்ட
திருமணக்கார் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- **ஆதிரா மருந்தகம்**
புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.



**தேவை**

நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.ஸ்ரான்லி வீதி, அல்லது கஸ்தூரியார் வீதியில் காணி அல்லது கட்டடம் தேவை. விற்கவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
0772247428




பரபரப்பான விற்பனையில்...
சர்வதேசக் கலைத்தரத்தில்...
நல்லூர்க் கந்தசுவாமியின் அழகிய
சித்திரத் தேரின் கலைவரலாறு கூறும் நூல்
"மகாஸ்தபதி கோவிந்தராஜுவின் தேர்த்திறன்"

அழகிய வர்ணப்படங்கள், ஒரு நிறப்படங்கள் தரும் கடந்த கால இலங்கை - யாழ்ப்பாணத் தமிழ் - இந்து வரலாற்று அனுபவம்.

நல்லூர்க் கந்தசுவாமி திருவிழாவையொட்டி பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர்:- வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் (M.Phil)
(முன்னைநாள் உதவி விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இயக்குநர், காங்கேயன் கலைக்கோட்டம், மயிலிட்டி, மாவிட்டபுரம், நீர்வேலி, மன்னார், யாழ்ப்பாணம்).


## அன்புடன் அஞ்சலிக்கின்றோம்



**அருள்பணி பி.யேசுநேசன் (அ.ம.தி)**

நல்ல நண்பனாய்
வழிகாட்டியாய்
நல்லாசானாய்
பாசத்திலும்
பொறுப்பிலும்
ஆன்மீகத்திலும்
முன்னுதாரணமான மூத்த குருவாய்
சிந்தனைத் தெளிவுள்ள
சீரிய மனிதனாய்
எம்மோடு வழிநடந்தீர்
நன்றி
இறையடியில் இணைவோம்.

- யாழ்.மறை மாவட்ட குரு நண்பர்கள்.

(87955)

## மரண அறிவித்தல்கள்

### இராமநாதன் செல்வமூர்த்தி (S.R)



[இ.போ.ச., வட. கோண்டாவில் சாலை சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர், O.I.C]

நீர்வேலியைச் சேர்ந்த இராமநாதன் செல்வமூர்த்தி நேற்று (16.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் இராமநாதன் மற்றும் முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் தம்பிராசா - புஸ்பராணி தம்பதியினரின் அன்பு மருமகனும் கவிதாவின் அன்புக் கணவரும் அமரர் சிவபுனிதம், விக்கினேஸ்வரி, கருணாமூர்த்தி, அமரர் இத்தினமலர், ஆனந்தமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அஜந்தன் (இறுதி வருட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்), லதீஸ்வரன் (சவுதி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

### நவரத்தினம் சிவபுனிதம் [வசந்தி]



நீர்வேலியைச் சேர்ந்த நவரத்தினம் சிவபுனிதம் (வசந்தி) நேற்று (16.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் நவரத்தினத்தின் அன்பு மனைவியும் சாந்தரூபன் (ஜேர்மனி), துஷ்யந்தி (கொழும்பு), மோகனதாஸ் (நீர்வேலி), அத்தியார் கல்லூரி மாணவிகளான துவாரகா, சுபாசினி ஆகியோரின் அன்புத் தாயாரும் இதயகுமாரின் அன்பு மாமியாரும் விக்கினேஸ்வரி, கருணாமூர்த்தி, அமரர் இரத்தினமலர், ஆனந்தமூர்த்தி, அமரர் செல்வமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவர்களின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2009) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணியளவில் அவர்களது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்கள் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
கவிதா (மனைவி),
நவரத்தினம் (கணவர்).

## தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (வ-து)
## கொடிகாமம்

**இடைக்குறிச்சி சிறப்பு கூட்டுறவுநகர் (MINI CO-OP CITY)**
**திறப்பு விழா அழைப்பு**

காலம்:- 18.08.2009 செவ்வாய்க்கிழமை
இடம்:- இடைக்குறிச்சி சிறப்பு கூட்டுறவு நகர், வரணி
நேரம்:- நண்பகல் 12 மணி

தலைமை
**திரு.வே.விநாயகமூர்த்தி** - சங்கத் தலைவர்

பிரதம விருந்தினர்
**உயர் திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்கள்
(சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும்)

சிறப்பு விருந்தினர்கள்
★ **திரு.வீ்.சிவலிங்கம்** -
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்
★ **திரு.குசைமுத்து அலெக்சாண்டர் சாள்ஸ்**
(யாழ்.மாவட்ட பிரதி இணைப்பாளரும், தென்மராட்சி அமைப்பாளரும் - ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)
★ **திரு.செ.ஸ்ரீனிவாசன்** - பிரதேச செயலர் தென்மராட்சி
★ **திரு.எஸ்.சிவராஜலிங்கம்** - செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை
★ **திரு.க.சண்முகலிங்கம்** - முகாமையாளர், மக்கள் வங்கி சாவகச்சேரி
★ **திருமதி இ.ரகுநாதன்** -
உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி

*இந் நிகழ்விற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பணிப்பாளர்கள், கிளைக்குழு
உறுப்பினர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்
**கொடிகாமம்.** (சி/5660341) தென்.கிழக்கு ப.நோ.கூ.சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வெள்ளத்துக்குள் அகதிகள் வாழ்வு

நாம் இப்பத்தி ஊடாகவும், அவ்வப்போது வேறு தமிழர் தரப்புகளும், ஐ.நா.உட்பட்ட பல்வேறு சர்வதேச தொண்டர் அமைப்புகளும் அறிக்கைகள் மூலமும் தொடர்ந்து எச்சரித்து வந்த ஓர் விடயம் இப்போது பேரவலமாக இடம்பெறுகின்றது.

வவுனியாவில் அகதிகளுக்கான நலன்புரி மையங்கள் என்ற பெயரில் இயங்கும் தடுப்பு முகாம்களுக்குள் சிறைக் கைதிகள் போல முடக்கப்பட்டிருக்கும் சுமார் மூன்று லட்சம் தமிழ் சிவிலியன்கள் எதிர்கொள்ளும் - எதிர்கொள்ளப்போகும் - பேரவல நிலைமை குறித்துப் பலரும் அரசுக்குச் சுட்டிக்காட்டி வந்தனர். ஆனால் தனது அரசியல், புவியியல், பாதுகாப்பு நலன்களை மட்டும் முன்னிறுத்தி தீர்மானங்களை எடுக்கும் கொழும்பு அரசின் கவனிப்பில் இந்த எச்சரிக்கை அறிவிப்புகள் 'செவிடன் காதில் ஊதிய சங்காகவே' செயலிழந்தன.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட - காற்றோட்டமேயில்லாத - சிறிய கொட்டகைகளுக்குள் - குறுகிய இடத்தில் - கொத்துக் கொத்தாக மந்தைகளை அடைப்பது போல லட்சக்கணக்கில் மக்களை இப்படி அடைத்து வைத்திருக்கின்றார்கள். பெரும்பாலான முகாம்கள் அவசர அவசரமாகக் காடுகளை வெட்டி மட்டமாக்கிய நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மழை வந்தால் இந்தக் கொட்டகைகளுக்குள் வெள்ளம் புகுந்துவிடும்; பேரவலம் நேர்ந்துவிடும். - என்றெல்லாம் எச்சரிக்கப்பட்டு வந்தது. ஆனால் அரசோ, அதிகாரிகளோ இந்த எச்சரிக்கைகளைக் கவனத்தில் எடுத்து, காரியமாற்றும் சிரத்தையில் இல்லை.

'பட்ட காலிலே படும்' என்பதுபோல - தமிழர்கள் செய்த குற்றமோ என்னவோ, இந்த அகதிகளுக்குத் தான் தொடர்ந்தும் பேரவலத்தொல்லை. குறிப்பிட்ட காலத்துக்கு இரண்டு மாதம் முன்பதாகவே கொட்டு, மழை பிடித்துவிட்டது. மூன்று நாள் மழையிலேயே முகாம் பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்து விட்டது.

தமது வீடு, வாசல்கள், உறவுகள், கமபுலங்கள், உடைமைகளைப் போருக்குப் பறிகொடுத்து, தடுப்பு முகாம் கொட்டகைகளுக்குள் கைதிகள் போல முடக்கப்பட்ட இந்தக் கைதிகளில் பல்லாயிரம் பேரை, முகாம் கொட்டகைகளுக்குள்ளும் முடங்கவிடாது விரட்டுகின்றது வெள்ளம்.

ஆரம்ப மழைக்கே நிலைமை இதுவென்றால், மாரி கொட்டி வெள்ளம் சீறிப்பாயத் தொடங்கியதும் ஏற்படப்போகும் மனிதப் பேரவல நிலைமை குறித்துக் குறிப்பிடவே தேவையில்லை. எண்ணிப்பார்க்க பேரச்சம் தரும் மோசமான கட்டம் அப்போது ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

குறுகிய நிலப்பரப்புக்குள் பல லட்சம் பேர் அடிப்படை வசதிகளின்றி சிறைவைக்கப்பட்டிருக்கையில் மழை வெள்ளமும் சேர்ந்தால் பெரும் சுகாதாரச் சீர்கேடு நேரும். மலசல கூடங்கள் பாதிப்புறும். ஏற்கனவே பரவிவரும் தொற்றுநோய்கள் கட்டுக்கடங்காமல் வியாபிக்கும். குடிதண்ணீர் விநியோகம் மேலும் மோசமடையும். சமைப்பதற்கு அடுப்புக்கு காய்ந்த விறகு கூட கிட்டாத நிலைமை.

குற்றம் இழைத்ததின் பேரில் அல்லது குற்றமிழைத்த சந்தேகத்தின் பேரில் தென்னிலங்கைச் சிறையில் வாழும் கைதிகளுக்கு அல்லது விளக்கமறியல் சந்தேக நபர்களுக்கு இருக்கின்ற - கிடைக்கின்ற - வசதிகள், வாய்ப்புகள் கூட அற்ற நிலையில் இந்த வன்னி மக்கள் பேரவலச் சிறைக்குள் வைக்கப்பட்டிருக்கின்றமை எந்தக் காரணத்தாலும் நியாயப்படுத்தக் கூடியதல்ல.

இப்படி அப்பாவி மக்களை அநியாயமான முறையில் தடுத்து வைத்திருக்கும் கொடூரத்துக்கு நியாயம் வேண்டி எங்கு முறையிடுவது எனத் தெரியாமல் தமிழர் சமூகமே செயலிழந்து தடுமாறுகின்றது.

சர்வதேச நாடுகள், ஐ.நா.அமைப்புகள், மனித உரிமை இயக்கங்கள் போன்ற சகல தரப்புகளும் இவ்விடயத்தில் நீதி வேண்டி எழுப்பிய குரல்களும், வற்புறுத்தல்களும், கொழும்பின் மனதை எட்டவில்லை. இலங்கை நீதிமன்றங்கள் கூட பல லட்சம் மக்கள் சம்பந்தப்பட்ட இந்த மனிதப் பேரவல விவகாரத்தை வழமையான சாவகாசப் போக்கில் கையாள்கின்றன. அங்கிருந்தும் கூட நீதி, நியாயமான காலத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழர்களுக்கு இல்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குத் தன்னும் இந்த விடயத்தை எடுத்துச் சென்று நியாயம் கோரலாமா எனத் தமிழர் தரப்பில் சிந்திக்கத் தலைப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் பிரசன்னத்தோடு வன்னியில் மடுத் திருத்தலத்தில் மடுமாதா அன்னையின் வருடாந்த உற்சவம் நடந்தேறியிருக்கின்றது.

மடுத் திருப்பதியை வாழ்விடமாகக் கொண்ட மக்கள் வன்னி முகாம்களின் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் சிறை இருக்க, அவர்களின் சொந்தப் பூமியில் உள்ள திருத்தலத்தில் தென்னிலங்கைப் பக்தர்களின் பிரசன்னத்தில் திருவிழாவை ஒப்பேற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டமை குறித்து ஆயர்கள் மனம் விசனித்துக் கருத்து வெளியிடும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

நீண்ட காலத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு, தெற்கு மக்கள் ஒன்று கூடக்கூடிய ஓர் உயரிய சமய நிகழ்வில் அத்திருப்பதியைச் சேர்ந்த மக்களைப் பங்குபற்ற விடாமல் சிறை வைக்கும் கொடூரம் நிகழ்ந்திருப்பது சகிக்க முடியாத பேரவலமாகும்.

இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் என்ன நியாயம் சொல்லப் போகின்றது கொழும்பு?

# பொட்டு அம்மானை பிரபாகரன் பிற்காலத்தில் நம்பவில்லையாம்

## புலன் விசாரணைகளில் பத்மநாதன் தெரிவிப்பு

**நேற்று (16.08.2009) 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.**

அரசியல் ரீதியாகவோ இராணுவ ரீதியாகவோ ஜனாதிபதி பேர்ஸி மஹிந்த ராஜபக்ஷ தமது கவர்ச்சிப் புகழை முன்வைத்து வெற்றிக்கு மேல் வெற்றிகளைக் குவித்து வருகின்றார். இந்த வருடம் மே மாதத்தில் புலிகளின் இராணுவத் தோல்வியினை அவர் கண்டு மகிழ்ந்தார். மூன்று மாதங்களின் பின்னர் சர்வதேச மட்டத்தில் அந்த அமைப்பின் மர்மங்களைத் துலக்கி மேலும் வெற்றிகளைக் கண்டு வருகிறது அவரது அரசு. புலிகளின் தற்போதைய தலைவர் குமாரன் பத்மநாதன் அல்லது கே.பி கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதன் மூலம் இது சாத்தியமாகியுள்ளது.

### பத்மநாதன் நடத்தப்படும் விதம்

இரகசியமான ஓர் இடத்தில் வைத்து பத்மநாதன் விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது. அவரைப் பார்ப்பதற்கு அனுமதிக்கும்படி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. எந்த நிலைமையில் வைத்து அவர் விசாரிக்கப்படுகிறார் என்பதை அறிந்துகொள்வதற்காக அந்தக்குழு இம்மாதிரி கோரிக்கையை வைத்திருப்பதாகத் தெரிகின்றது.

உலகத் தலைநகர்களில் இயங்கும் சில தமிழ் அமைப்புகளும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கியிருப்பதுடன் அவரை விடுதலை செய்விப்பதற்கான சட்ட ஆலோசனைகளையும் நடத்தி வருகின்றன.

அவர் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதாகவும் ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்கும்படி பலவந்தம் செய்யப்படுவதாகவும் சில அமைப்புகள் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளன.

இது உண்மைக்கு அப்பாற்பட்டது. ஆனால் பத்மநாதனின் காவலிலுள்ள அவரது ஏனைய பல சகாக்களைப் போலன்றி, அதிக வசதிகளுடன் அவர் இருந்து வருகிறார். இதில் உருசிகரமான விடயம் என்னவென்றால் அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் அவர் பதில் வழங்கி வருகிறாராம். தம்மை புலிகளின் தலைவர் பிரபாகரனிடமிருந்து தொடர்பற்றவராகவே காட்டிக்கொள்ள முனைகிறார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளின்போது சிலர் தெரிவித்தனர். பிரபாகரனுடன் தாம் நேரடியாகப் பேசுவதில்லையென்றும் இடைத் தூதுவர்கள் மூலமே தொடர்புகள் வைத்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார். மாதாந்தம் தமக்கு அமெரிக்க டொலரில் செலவுக்குப் பணம் தரப்பட்டதாகக் கூறியுள்ள அவர் தாம் ஒரு சம்பளம் பெற்றுக் கொண்டு பணிபுரிந்த பணியாள் தான் என்றும் தெரிவித்துள்ளார்.

இத்தொகை போதாது என்று தாம் கூறியதையடுத்து 50 வீதம் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டதாம்.

பிரிவினைவாத போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு உதவிய இராணுவப் பொருள்களைத் தாம் கொள்வனவு செய்தமையை அவர் ஒப்புக் கொண்டுள்ளார். மலேஷியாவில் உள்ள தமது உதவியாளர் ஆனந்த னும் அமெரிக்க டொலரில் செலவுக்கு மாதாந்தம் பணம் பெற்றுக் கொண்டார் என்றும் ஒரு சமயம் தாம் ஓரங்கட்டப்பட்டதாகவும் பத்மநாதன் கூறியுள்ளார். இது பிரபாகரன் தமது புலனாய்வுத் தலைவர் பொட்டு அம்மானின் பேச்சை நம்பிய காலத்தில் என்று கூறியுள்ளார். பொட்டு அம்மான் ஏனைய தலைவர்களின் உதவிகளையும் பெற்றுக் கொண்டார். அவர்களின் முயற்சிகள் எதுவும் பயன்தரவில்லை.

2008ஆம் ஆண்டில்தான் தாம் மீண்டும் பிரதம ஆயுத கொள்வனவாளராகப் பதவியில் அமர்த்தப்பட்டாராம். பொட்டு அம்மான் தவறிழைத்துள்ளார் என்பதையும் தன்னைத் தவறாக வழிநடத்தியுள்ளார் என்பதையும் பிரபாகரன் அப்போதுதான் உணர்ந்துகொண்டிருந்தார் என்று பத்மநாதன் தெரிவித்துள்ளார். ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்ட வட்டாரங்களைப் பத்மநாதன் அடையாளம் காட்டியுள்ளார்.

### இடைக்கால அரசு ஏன் நிறுவப்பட்டது?

வெளிநாட்டில் இடைக்கால அரசு ஏன் நிறுவப்பட்டது என்ற கேள்விக்குப் பத்மநாதன் பதிலளிக்கையில் வேறொரு கோஷ்டியினர் தமது பணிகளை மோசடி செய்துவிட முயன்றதனால் இது செய்யப்பட்டதாகப் பத்மநாதன் கூறினார். இந்தக் கோஷ்டிதான் அமெரிக்காவில் இருந்து செயல்படுபவர்கள். ஒபாமாவுக்கான தமிழர்கள் என்று இவர்கள் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

பத்மநாதன் மீதான புலன்விசாரணைகள் இன்னும் பல நாள்களுக்குத் தொடரும் என்று நம்பப்படுகின்றது. பத்மநாதனின் கைதும் விசாரணைகளும் இறங்குமுகமான ஒரு நிலைப்பாட்டைக் காட்டுவதாகப் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த உயர்மட்ட தரப்புகளில் கருத்து நிலவுகின்றது. புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகள் முடிவுறுவதற்கு முன்பதாக பத்மநாதன் கைது செய்யப்பட்டிருப்பின் அது மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும். புலிகளின் இராணுவத் திறமைகள் யாவும் முறியடிக்கப்பட்டுவிட்டதன் பின்னர் அவர் வழங்கியுள்ள தகவல்கள் யாவும் செயல்படுத்தலுக்கு உதவமுடியாதவையாய் உள்ளன என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இருந்தபோதிலும் புலிகளின் கப்பல்துறை வலை அமைப்புகள், வெளிநாட்டு வர்த்தக செயற்பாடுகள், மற்றும் இந்த நிதிகள் எல்லாம் எங்கு முடக்கிவைக்கப்பட்டுள்ளன என்ற விவரங்கள் கிடைக்க உள்ளன.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் வரவிருக்கும் நிலையில் இந்தத் தகவல்கள் பிரசாரத்துக்குப் பெரிதும் உதவியாகவிருக்கும் என்று கருதலாம்.

புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்ட கையோடு நடத்தப்பட்ட மாகாணசபைத் தேர்தல்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சி கூட்டணிக்கு சிறப்பான வெற்றிகளை வழங்கியுள்ளது. வவுனியா நகரசபையில் மட்டுமே 143 வாக்குகளால் இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் தோல்வி கண்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமே தமிழரசுக்கட்சி. பிரிவினைவாதப் போர் தோல்விகாணும் வரை இக்கட்சியே புலிப்போராளிகளின் பிரதிநிதித்துவக் கட்சியாகக் கருதப்பட்டது. அது ஐந்து ஆசனங்களையும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (PLOTE) மூன்று ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டு ஆசனங்களையும் சிறிலங்கா முஸ்லிம்காங் கிரஸ் ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பியுடன் சேர்ந்து போட்டியிட்ட போதிலும் தமக்குரிய பிரசார வசதிகள் அனைத்தையும் பயன்படுத்தியபோதிலும் வவுனியா நகரசபையைக் கைப்பற்ற முடியாமல் போனமை அரச தரப்புக்குக் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. சமீப காலத்தில் அரசுக்கு ஏற்பட்டுள்ள ஒரு தேர்தல் தோல்வியாகும் இது. புலிகள் இராணுவ ரீதியில் தோற்றுவிட்ட நிலையில் வவுனியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் சிந்தனையை இத்தேர்தல் வெளிப்படுத்தியிருக்கிறது.

புலிகளின் கொடூரப் பிடியிலிருந்து வடக்கை விடுவித்துவிட்டதாகப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாண வாக்காளர்கள் இன்னமும் அரசின் மீது கசப்புணர்ச்சியுடனேயே இருக்கிறார்கள் என்பதை அங்கு நடைபெற்ற தேர்தல் முடிவு காட்டுகின்றது என்கிறார்கள் விமர்சகர்கள். புலிகளை வீழ்த்திய கையோடு எழுந்த பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முனையாமல் - இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை, பொருளாதார மீள் எழுச்சி போன்றவற்றைக் கவனிக்காமல் அவசரப்பட்டு அரசு தேர்தலில் இறங்கியது. வடபகுதி வாக்காளர்கள் அரசாங்கத்தை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு காலம் இன்னும் இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

எதிர்க்கட்சியான ஐ.தே.க.வின் தீர்மானம் எடுக்கும் உயர்மட்ட அங்கமான காரியகுழுக்கூட்டம் கடந்தவாரம் புதன்கிழமை நடைபெற்றது. ஊவாமாகாணத் தேர்தலில் அடைந்த பின்னடைவின் பின்னர் நடந்த முதல் கூட்டம் இதுவாகும்.

மாகாணசபைகள் முறையை ஐ.தே.க தான் 1987இல் அறிமுகப்படுத்தியது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியுடன் இணைந்து இந்தச் சட்டமூலத்தை எரித்து. பஸ்களை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினார்கள்.

புதன்கிழமை கூட்டத்துக்கு ரணில்விக்கிரமசிங்க தலைமை வகித்தார். எதிர்வரும் தேர்தல்களையொட்டி நியமனக் குழுக்களைத் தெரிவுசெய்வது அன்றைய முக்கிய அலுவலாகும்.

ஜாஎல மற்றும் குளியாப்பிட்டிய தொகுதிகளில் இருமுக்கிய கட்சிப் பிரமுகர்கள் ஓரங்கட்டப்படுவது பற்றி குருநாகல எம்.பி தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

காரியக் கமிட்டியானது 'ஆம் சாமி' போடும் குழுவாக இருக்கிறது என்றும் எடுக்கப்படும் தீர்மானம் எதுவும் செயல்படுத்தப்படுவதில்லையென்று அவர் கூறினார். (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 02 | 18.08.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | மு.இ. 09.09 வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் |
| | பி.ப. 02.16 வரை |
| சுபநேரம்: | 10.35 - 12.05 |
| ராகுகாலம்: | 03.05 - 04.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பபு றெக்ஸ் ரைலஸ்

பெண்களுக்கான நவீன வகை பஞ்சாபிகள், துணிகள், சாறி வகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் அனைத்து அன்பளிப்புப் பொருள்கள் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: பபு றெக்ஸ் ரைலஸ்,
கம்பஸ் லேன், திருநெல்வேலி.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1113 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம் 08 12 38 42

14-08-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 10,239,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 215,488 | 20/- | 4,309,760/- |
| 2 இலக்கங்கள் | 19,845 | 40/- | 793,800/- |
| 1 இல. + லக்கினம் | 19,636 | 60/- | 1,178,160/- |
| 2 இல. + லக்கினம் | 1,777 | 200/- | 355,400/- |
| 3 இலக்கங்கள் | 505 | 1000/- | 505,000/- |
| 3 இல. + லக்கினம் | 52 | 10,000/- | 520,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 11,192,700/- | - |
| மொத்தம் | | | 8,062,120/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 257,310 | | 8,562,120/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 11,673,350/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் புத்திகா தமாலி கட்டுநாயக்க

கைத்தொலைபேசி வெற்றியாளர்: பி.சமீர சந்தருவன் கேகாலை

2009 ஆகஸ்ட் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும் வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 500423748-3-28 |
| பதுளை | 500417484-1-17 |
| குருநாகல் | 500412069-3-15 |
| கம்பஹா | 500421238-0-05 |
| கொழும்பு | 500430649-7-24 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக.17

கோப்பாய் தெற்கு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகத்துடன் திருவிழா நிறைவுபெறும். (9)

* * *

கோண்டாவில் கிழக்கு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் நூதன பிரதிஷ்டா ஏக குண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 6மணி முதல் முற்பகல் 10 மணி வரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (9)


## தவறிவிட்டது

மல்லாகம் சந்தி, அளவெட்டி வீதியூடாக, சுன்னாகத்துக்கு இடையில் 15.08.2009 அன்று கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முருகையா கோகுலன், அளவெட்டி தெற்கு என்னும் முகவரியுடனோ அல்லது 0774938826, 0602737469 ஆகிய தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (87854)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் கனடா, பிரஜாவுரிமை, வயது 29, பூசம் 2ஆம் பாதம் உடையவருக்கு அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: 0777066487 (87697)

## MULTIMEDIA COURSES

எண்ணங்களின் பிரதிபலிப்பு

DIPLOMA IN
Digital Video Production
(Audio & Video Editing)

PROFESSIONAL
Diploma in Graphic Design

ADV. DIPLOMA IN
Digital Pre-press

100% செய்முறை பயிற்சி

- Advanced Diploma in Macromedia Application
- Diploma in Desktop Publishing

தற்பொழுது பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

ASIAN - CSC COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. 077-3122198


பிரிவிலும் மறவா 40 ஆம் நாள் நினைவஞ்சலி

## துறவியாய்த் தந்தீர் நன்றி

மண்ணில் 13 . 03 . 1949



விண்ணில் 07 . 07 . 2009

## அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ் H.F.

இறை உறவால் இணைந்து நல்ல துறவியாகி
மறை அறிவில் உயர்ந்து நின்று துறை தெரிந்து
நிறைவுடனே பணிபுரிந்து துறவியரை
அறவழியில் உருப்படுத்த உழைத்து நின்றாய்

அன்னைபோல அரவணைத்து அவனியிலே
ஆறுநல்ல ஒழுங்குரைத்து ஒழுக்கமதும்
அன்புடனே ஓதிநல்ல உத்தமராய்
வென்றுயர ஞானவழி ஊட்டி நின்றாய்

கள்ளமில்லா மனதுடனே பழகி நின்று
உள்ளமெலாம் கலங்கிநின்ற ஏழைகளை
அள்ளிநிதம் அணைத்துதவி மறைமுகமாய்
வள்ளலென வாழ்ந்து மண்ணில் மகிழ்ந்து நின்றாய்

புரிந்துணர்வில் உயர்ந்து பிறர் குறையறிந்து
அருந்துணையாய் இருந்து அவர் துயர் களைந்து
திருக்குடும்பக் கன்னியர்கள் சபை வளர
கருத்துடனே பணிபுரிந்தாய் ஆண்டு ஆறாய்

ஆதிபிதா தேவசுதன் தூய ஆவி
அருளினூடே சோதரியே ஆன்சில்லா
அருமறைக்காய் உனைதெரிந்த இறைவனுக்கு
நன்றி சொல்லி உந்தனையும் அஞ்சலித்தோம்.

அருட் சகோதரி நிமலின் டெலிற்றா
H.F. இன் பெற்றோர்
திரு.திருமதி C.இஸ்ரனிஸ்லோஸ்,
பிள்ளைகள்.

28,சென்.ஜேம்ஸ் வீதி,
ஊர்காவற்றுறை.

(87951)


## விசேட விலை அறிவித்தல்

வலயக்கல்வி அதிகாரிகளே! பாடசாலை அதிபர்களே!
மாணவ மாணவிகளே! வர்த்தகப் பெருமக்களே!

நாம் இறக்குமதி செய்து விற்பனை செய்யும் விலை:

USAவெளியீடான ஆங்கிலப் புத்தகங்கள் 135/= (US $-1)
U.K.வெளியீடான ஆங்கிலப் புத்தகங்கள் 250/= (£-1)
இந்தியா வெளியீடான ஆங்கிலப் புத்தகங்கள் 3.50/= (India Rs.1/=)
இந்தியா வெளியீடான தமிழ்ப் புத்தகங்கள் 4.00/=(India Rs.1/=)

இலங்கை வெளியீடான தமிழ், ஆங்கிலப் புத்தகங்கள் பதிப்பில் அடித்த விலையிலும் வழங்கப்படுவதுடன் அனைத்துப் புத்தகங்களுக்கும் 10%இற்கும் குறையாத கழிவு வழங்கப்படும்.
வர்த்தகப் பெருமக்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
(நாம் புத்தகங்களில் பதிப்பகங்களினால் அடித்த விலையை அழித்தோ வேறு விலை ஸ்ரிக்கர் ஒட்டியோ விற்பதில்லை என்பதைக் கவனிக்கவும்).

கடந்த ஐம்பது வருடங்களாக கல்விச் செல்வத்தை வளர்ப்பதில் பக்க பலமாக இருக்கும் ஒரே ஸ்தாபனம்

## ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
02, சென்.லூசியஸ் ஸ்ரீற், கொழும்பு-12.




## மானிப்பாயில்

POWER GYM

BODY CARE & FITNESS CENTRE

ஆரம்பிக்கப்படுகின்றது




இன்று (17.08.2009) காலை 7.00 மணிக்கு
N.J. Lawrence (HNB Manager - Manipay Branch)
அவர்களால் திறந்து வைக்கப்படுகின்றது.

உடுவில் வீதி, மானிப்பாய் (GREEN HOSPITAL) அருகில்



உருக்குத் தளபாடம், MDF BOARD தளபாடம் மற்றும் அனைத்து தளபாடங்களும், உருக்கினாலான சகல வேலைகளும் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.



## லிங்கன் வெல்டிங் வேக்ஸ்

145/1, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 2846


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் புனரமைப்புப் பணிகளுக்கு மட்டுமன்றி தொழில்சார் மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் உதவிகள்

## கொமர்ஷல் வங்கியின் உயரதிகாரிகள் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.17

குடாநாட்டில் யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றி தொழில்சார் மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் கொமர்ஷல் வங்கி தனது பங்களிப்பை வழங்க உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கொமர்ஷல் வங்கிக்கிளைகளில் வருடத்தின் 365 நாள்களும் வங்கிச்சேவை வசதியை ஏற்படுத்தும் திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிரிகையாளர் மகாநாடு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை யாழ். ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கி, பிரதான கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ். ரவீந்திராவின் தலைமையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் வங்கியின் சிரேஷ்ட பிராந்திய முகாமையாளர் எஸ். ராஜசூரியர், பிரதான செயற்பாட்டு அதிகாரி ரவி டயஸ், பிரதிச் செயற்பாட்டுப் பொதுமுகாமையாளர் சனத் பண்டாரநாயகா மற்றும் திட்டமிடல் அமுலாக்கல் உதவிப்பொது முகாமையாளர் றிச்சர்ட் ரொட்றிகோ ஆகியோரும் கலந்து கொண்டு கொமர்ஷல் வங்கியின் 365 நாள்களும் வங்கிச் சேவைத் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்வது தொடர்பாக விரிவாக விளக்கமளித்தனர்.

யாழ். குடாநாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளின் செய்தியாளர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகச் செய்தியாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விளக்கமளிக்கும் வகையில் கொழும்பிலிருந்து வந்த உயரதிகாரிகள் கொமர்ஷல் வங்கி யாழ். குடாநாட்டின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு வழங்கிவரும் வழங்கவுள்ள உதவிகள் குறித்து விரிவாக விளக்கமளித்தனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைப்புப் புணி என்ற வகையில் போர்ச்சூழல் காரணமாக முற்றாகச் சேதமுற்ற நாவற்குழி ரயில் நிலையத்தை மீண்டும் புனரமைப்பதற் காக கொமர்ஷல் வங்கி 18 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவை தவிர வங்கியின் கூட்டுறவு சமூக நட்புறவு நிதியிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் கற்றல் தொழிற்பாடுகளுக்கான தொழில்சார் திட்டங்களுக்கென கணனிகளை வழங்கும் நடவடிக்கைகளையும் கொமர்ஷல் வங்கி நடைமு றைப் படுத்தி வருகிறது. இதன் முதற் கட்டமாக மல்லாகம் மற்றும் தெல்லிப்பழை லயன்ஸ் கழகங்களின் ஊடாக கணனிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது. அத்துடன் வதிரி பரமா னந்த ஆச்சிரமத்துக்கு முச்சக்கரவண்டி ஒன்றும் வங்கியினால் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது.



ரில்கோ ஹோட்டலில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கொமர்ஷல் வங்கியின் யாழ்.பிராதான கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.ரவீந்திரா உரையாற்றுவதையும் சிரேஷ்ட பிராந்திய முகாமையாளர் எஸ்.ராஜசூரியர், தலைமையக பிரதான செயற்பாட்டு அதிகாரி ரவி டயஸ், பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடு) சனத் பண்டாராநாயகா, திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் உதவிப் பொதுமுகாமையளார் றிச்சர்ட் ரொட்றிகோ ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

போர்ச்சூழல் காரணமாக யாழ். குடாநாட்டில் இயங்கிய சிறு கைத்தொழில் முயற்சிகளில் பெரும்பாலானவை முற்று முழுதாகக் கைவிடப்பட்டன. தற்போது குறிப்பிட்ட அத்தொழில் முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க ஆர்வம் காட்டும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு - அவர்களது முயற்சிகளுக்கு ஊக்கமளித்து உதவும் விதத்தில் இலகுகடன் வசதி போன்ற திட்டங்களை கொமர்ஷல் வங்கி முன்னெடுக்குமா? என்ற கேள்விக்கு இவ்விடயம் தொடர்பாக எதிர்கா லத்தில் பரிசீலிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

(அ - 03)

# கொமர்ஷல் வங்கி 365 நாள்களும் திறந்திருக்கும் சேவை யாழ்.கிளையில் நேற்று ஆரம்பமாகியது

யாழ்ப்பாணம், ஓக. 17

70 வருட பாரம்பரியம் கொண்ட கொமர்ஷல் வங்கி அரசின் 'வடக்கின் வசந்தம்' வேலைத் திட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொள்ளும் வகையில் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு திருப்திகரமான சிறந்த வங்கிச் சேவையை வழங்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக யாழ்.குடாநாட்டில் 365 நாள்களும் வங்கிச் சேவையை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

அதன் முதற்கட்டமாக கொமர்ஷல் வங்கியின் யாழ்.பிரதான கிளையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் இடையீடின்றி தொடர்ந்து தினமும் செயற்படும் விதத்தில் வங்கிச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் 'ரில்கோ ' ஹோட்டலில் கொமர்ஷல் வங்கியின் உயர் அதிகாரிகள் நடத்திய செய்தியாளர்கள் மாநாட்டில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

செய்தியாளர்கள் மாநாட்டில் கொமர்ஷல் வங்கி நாட்டில் மேற்கொண்டுவரும் தனது வங்கிச் சேவை தொடர்பான விவரங்களை - குறிப்பாக யாழ்.குடாநாட்டில் கொமர்ஷல் வங்கி மேற்கொண்டுவரும், மேற்கொள்ளவுள்ள வங்கியின்அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான விவரங்களை உயர் அதிகாரிகள் விவரித்தனர்.

அப்போது அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரச, வர்த்தக விடுமுறை தினங்கள் நாட்டின் குறிப்பிட்ட ஒரு மதத்தினர் மற்றும் இனத்தினரின் பாரம்பரிய கொண்டாட்டங்களையொட்டிப் பிரகடனப்படுத்தப்படுவதால் குறிப்பிட்ட அந்த விடுமுறை தினங்களில் நாட்டின் ஏனைய இனத்தவர் மற்றும் மதத்தவர்கள் தமது தொழில்சார் மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காக வங்கிச் சேவையைப் பெற்றுக்கொள்ள இயலாதுள்ளது. அதுமட்டுமன்றி வார இறுதி விடுமுறை தினங்களில் வங்கிச் சேவைஇடம்பெறாதிருப்பதன் காரணமாக வாடிக்கையார்கள் தமது எதிர்பாராத அவசர தேவைக்காக வங்கிச் சேவையைப் பயன்படுத்த இயலாதுபோய்விடுகிறது.

இவற்றைக் கருத்திலெடுத்து வருடம் 365 நாள்களும் இடையூறின்றித் தொடர்ச்சியாகத் தனது வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவையை வழங்கும் திட்டத்தை கொமர்ஷல் வங்கி ஆரம்பித்தது.

கொமர்ஷல் வங்கியின் இத்திட்டம் கடந்த பல வருடங்களுக்கு முன்னரே கொழும்பு, காலி, கண்டி, நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள வங்கிக் கிளைகளில் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. போரினால் பாதிக்கப்பட்டு தற்போது புனரமைப்பு நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுவரும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வங்கியின் வாடிக்கையாளர்களது நன்மை கருதி இத்திட்டம் கொமர்ஷல் வங்கியால் நேற்றுமுதல் யாழ்.குடாநாட்டில் வங்கியின் யாழ்.பிரதான கிளையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விடுமுறை நாள் வங்கிச் சேவையாக காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை வாடிக்கையாளர்களுக்குத் தனது சேவையை வழங்கும்.

இது தவிர, தன்னியக்கப் பொறி மாற்று முறை மற்றும் உடனடி பண பரிமாற்றமுறை என்பன தற்போது யாழ்.குடாநாட்டு கொமர்ஷல் வங்கிக் கிளைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நிலையிலும், வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் விதத்தில் இந்நடைமுறைகள் விரிவுபடுத்தப்பட்டு விஸ்தரிக்கப்படவுள்ளன.

வங்கியின் பிரதான செயற்பாட்டு அதிகாரி ரவிடயஸ் கருத்து வெளியிடுகையில், கொமர்ஷல் வங்கி முற்றுமுழுதாக ஒரு தனியார் வங்கி என்ற கருத்து தவறானதாகும். இவ்வங்கியின் செயற்பாடுகளில் அரசு 30 விகித பங்கைக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். கொமர்ஷல் வங்கி யாழ். குடாநாட்டில் ஏற்கனவே சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, யாழ்.இரண்டாம் கிளை ஆகிய கிளைகளை வெற்றிகரமாக இயக்கி வருகிறது - என்றார்.

எதிர்வரும் மிகக் குறுகிய காலத்துள் மானிப்பாயில் வங்கியின் மேலுமொரு கிளை திறந்து வைக்கப்படவுள்ளது. இவை தவிர குடாநாட்டுக்கு வெளியே மன்னார் மற்றும் கிழக்கு மாகாணத்தின் கல்முனை, காத்தான் குடி ஆகிய தமிழ்ப் பிரதேசங்களிலும் கொமர்ஷல் வங்கி தனது கிளைகளைத் திறக்கவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது.

இப்போது நாடு முழுவதிலும் 25 இலட்சம் வாடிக்கையாளர்களைக்கொண்டுள்ள கொமர்ஷல் வங்கியின்ஸ்திரத்தன்மைக்கு அதன் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையும் ஆதரவுமே காரணமென வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் றிச்சர்ட் ரொட்றிக்கோ தெரிவித்தார். (அ-03)

# பாட நூல்களைச் சிறப்பாகப் பேணிய மாணவர்களுக்கு சான்றிதழ்

கோப்பாய்,ஓக.17

பாடநூல்களை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திய மாணவர்களுக்கு 2009ஆம் ஆண்டுக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்த இந்தச் சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கும் செயற்பாடு காரணமாக கடந்த ஆண்டு தரம்1 முதல் 11 வரையான பாடநூல் மீள் பாவனை 12% இலிருந்து 23% வரை அதிகரித்துள்ளதாகவும் இதனால் ரூபா80 கோடிக்கு மேலான தொகை மீதப்படுத்தப்பட்டுள்ளதாக் தெரிவிக்கப் படுகிறது.

எதிர்வரும் ஆண்டுகளில் பாடநூல்களின் மீள்பாவனையை 35% மாக உயர்த்தும் நோக்கில் இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. கடந்த வருடத்தைப் போன்றே தரம் - 1 முதல் 11 வரையான சகல சமாந்தர வகுப்புகளி லிருந்தும் மிகச் சிறப்பாகப் பாடநூல்களைப் பேணிய மூன்று மாண வர்களைத் தெரிவு செய்து பாட நூல் விநியோக நாளன்றே சான்றிதழ் வழங்கப் படவுள்ளது.

இதற்காக பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படவுள்ளன.

* பாடநூல் தொகுதியின் அனைதது நூல்களுக்கும் நன்கு பாதுகாக்கக்கூடிய விதத்தில் பொருத்தமான முறையில் மேலுறை போடப்பட்டிருத்தல்.
* அனைத்து நூல்களினதும் உள்பக்கங்கள் அசுத்தப்படுத்தப்பட்டோ, கிழித்தோ, மடித்தோ இருக்காமை.
* மேலுறை மற்றும் உள்பக்கங்களில் கோடுகள் கீறீயோ, எழுதியோ , சுரண்டியோ, வர்ணம் பூசியோ இருக்காமை
* நூலின் உள்பக்கங்கள் வரிசை ஒழுங்கில் இருத்தல் (தாள்கள் கிழிக்கப்படா திருத்தல்)
* மீள் பாவனைக்குட்பட்ட நூல்க ளைப் பயன்படுத்தும் மாணவர்கள் தொடர் பில் ஏற்கனவே மடிக்கப்பட்டிருந்த, கிழித்திருந்த நூல்களின் பக்கங்களைப் பாதுகாக்கும் பொருட்டு பொருத்தமான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருத்தல்
* பாடசாலைக்கு தினமும் நூல்களை எடுத்து வருதலும், கற்றல் நடவடிக்கைகளில் இவற்றைப் பயன்படுத்தலும்.

ஆகிய விடயங்கள் கருத்தில் எடுக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(04- 72)



சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையம், கூட்டுறவு நகர் என்பன சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று முன்தினம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டன. சாவகச்சேரிக்கு வி[illegible] தேவானந்தா முற்பகல் 11 மணியளவில் மட்டுவில் தெற்கு சோமஸ்கந்தா கிளை நிலையத்தின் சிறப்பு நகரைத் திறந்து வைத்ததன் பின்னர், 12 மணியளவில் எரிபொருள் நிரப்பும் நிலையத்தைத் திறந்து வைத்தார். [illegible] நிகழ்வுகளில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன், சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தென்மராட்சி கட்டளை அதிகாரி பிரிகேடியர் லியனகே உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

[படங்கள்: அருணன்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள பொருத்தமான மாற்று வாழ்முறைகளைப் பின்பற்றுதல் அவசியம்

பல வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் காலநிலை மாற்றம் பற்றி குறிப்பிட்ட சில அறிவியலாளர்கள் அல்லது காலநிலை அவதானிகளால் பேசப்பட்டு வந்த காலநிலை மாற்றம் என்பது தற்போது அனைத்துத் தரப்பினராலும் பேசப்படும் ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பல்வேறு பாதிப்புக்கள் மனிதனின் சுகதேகியான வாழ்க்கை முறையைக் கேள்விக் குறியாக்கியமையே இவ்வாறு பலரும் அக்கறை செலுத்துவதற்குக் காரணமாக அமைந்தது. அண்மைக்காலத்தில் யாழ் குடாநாட்டிலும் கூட பல்வேறு அசாதாரண மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது அனைவரும் அறிந்த விடயம் அதாவது பருவம் தப்பிய மழை வீழ்ச்சி, அதிக வெப்ப நிலை, கடும் வரட்சி, என்பன இவற்றுள் முக்கிய மாற்றங்களாகும். இதே போன்று எதிர்காலத்தில் காலநிலை மாற்றத்தின் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும் என்பதனால் காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வும் அக்கறையும் சமூகங்களில் ஏற்படுத்தப்பட்டுவருகின்றது. எனினும் இவை இன்னமும் பல பாமர மக்களுக்கு எட்டாத ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறுகிய சில காலப்பகுதிகளில். வானிலை அம்சங்களான மழைவீழ்ச்சி, வெப்பநிலை, அமுக்கம், ஈரப்பதன், காற்று போன்ற பல்வேறு வளிமண்டல மூலங்களில் ஏற்படும் மாற்றம் வானிலை மாற்றம் என்று குறிப்பிடப்படுகின்றது

ஆனால் காலநிலை மாற்றம் என்பது மேற்குறிப்பிட்ட காரணிகளின் நீண்டகால மாற்றத்தினைக் குறிக்கும். மேற்குறித்த வானிலை அம்சங்களில் ஏதாவது ஒன்றின் அதிகரிப்போ அல்லது குறைவடைதலோ இன்னொன்றினது அதிகரிப்புக்கோ அல்லது வீழ்ச்சிக்கோ காரணமாக அமையலாம். ஏனெனில் இவை ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவை.

**மூன்று காரணிகள்**

இவ்வாறு தோற்றம் பெறும் பாதிப்புக்கள் மூன்று காரணிகளில் தாக்கத்தைச் செலுத்தும்

பௌதீக ரீதியான பாதிப்பு, பொருளாதார ரீதியான பாதிப்பு, சமூக ரீதியான பாதிப்பு, என்பவையே அவையாகும். இவற்றுள் பௌதீகரீதியான பாதிப்புக்களை.:. மாற்றங்களை எடுத்து நோக்கும் போது

பருவமழை காலம் தாழ்த்துதல்

கிணற்று நீர்மட்டம் குறைதல்

கடற்கரையோர மணல் அகழ்வு காரணமாக கடல் நீர் தரையை உள்வாங்குதல் அதிகமாதல்

நன்னீர் உவர்நீராதல் புயல் அனர்த்தம்

வெள்ளப் பெருக்கு, கடல் மட்டம் உயர்தல்,பனிமலைகள் உருகுதல், விவசாய மண்வளம் குறைதல், அதிக வெப்பநிலை போன்றவற்றை பாரிய மாற்றங்களாகக் குறிப்பிட முடியும்.

பொருளாதார ரீதியான பாதிப்புக்கள்.:. மாற்றங்களை குறிப்பிடும் போது பல பயிர்கள் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் அத்துடன் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் இயற்கை அழிவுகளாலும் பயிர்கள் பாதிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. கோதுமை, சோளம், நெல் போன்ற பிரதான தானியப் பயிர்கள் அதிகரித்த வெப்பநிலையைத் தாங்க முடியாமல் அழிவடையக் கூடும். அத்துடன் போதிய நீர், சூரிய வெளிச்சம் இல்லாமையாலும் பயிர்கள் பாதிக்கப்படும் இதனால் உலகில் தானிய நெருக்கடி ஏற்படும். உலகில் 43 சதவீதமானவர்கள் இதனால் பாதிக்கப்படுவர் என ஐ.பி.சி.சி. எதிர்வு கூறியுள்ளது.

இதேபோன்று சமூக ரீதியான பாதிப்புக்கள்.:.மாற்றங்களை எடுத்து நோக்கும்போது மனித சமூகத்திற்கு புதிய வகையான நோய்கள் தோன்றும் வாய்ப்புண்டு. வெப்பநிலை அதிகரிப்பனால் மனிதனுக்கு தோல், கண் மற்றும் உளவியல் சார்ந்த நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. அத்துடன் மனிதனிற்கு தோல் வெளிறல், முடியுதிர்தல் போன்ற நோய்களும் ஏற்படும். வெப்பம் காரணமாக மனித நடமாட்டம் மட்டுப்படுத்தப்படும்.

இதனைவிட கடல்மட்டம்01அடி உயர்ந்தால் உலகின் 10கோடி மக்களும் 02அடி உயர்ந்தால் 30 கோடி மக்களும் இடம்பெயர நேரிடும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமுத்திரங்களின் நடுவில் அமைந்துள்ள தீவுகள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. சமுத்திரங்களின் நடுவில் அமைந்துள்ள தீவுகள் இதனால் கடுமையாக பாதிக்கப்படும்.

காலநிலை மாற்றப் பாதிப்புக்கள் தொடர்பாக ஓர் அறிவியலாளர் குறிப்பிடுகையில் “இவ்வாறு தொடரும் காலநிலை மாற்றத்தால் சுமார் 500 வருடங்களில் பூமியில மனிதன் மட்டுமன்றி ஏனைய உயிரினங்களும் வாழ முடியாது போய்விடும்” எனக் கூறுகின்றார்.

சுமார் 1940 களிலிருந்து இன்றுவரை ஆண்டு தோறும் கிடைக்கும் மழைவீச்சியின் அளவு குறைவடைந்து வருகின்றது அந்த வகையில் 2004ஆம் ஆண்டு 1869.5அஅஉம், 2005இல் 1235.3அஅ உம் 2006இல் 926.5அஅ மழைவீழ்ச்சியும் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணக்குடாநாட்டின், மழைவீழ்ச்சி, வெப்பநிலை போன்றவற்றின் பருவ காலங்களும் மாற்றமடைந்து செல்கின்றது.

**குடாநாட்டில் ஏற்படும் பாதிப்புகள்**

இதே போன்று குடாநாட்டு வெப்ப நிலையிலும் பல்வேறு மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மேற்படி வெப்ப அதிகரிப்பும், மழை வீழ்ச்சிக்குறைவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகமான பாதிப்பினை விவசாயச் செய்கையில் ஏற்படுத்தப் போகின்றது. இதனைவிட எதிர் காலத்தில் காலநிலை மாற்றத்தினால் கடல்நீர் மட்டம் உயர்வடையுமானால், யர்ழ்ப்பாணக் குடாநாட்டின். வடமேற்கே உள்ள தீவுகள் குறிப்பாக எழுவைதீவு, பருத்தித்தீவு நயினாதீவு, கச்சதீவு போன்ற தீவுகள் கடலில் மூழ்கும் அபாயம் உண்டு. இத்தீவுகளில் பல தீவுகள்,இதனைவிட யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில கடற்கரைப் பகுதிகள் நீரில் மூழ்கும் வாய்ப்புண்டு.

**காலநிலை மாற்றத்தின் விளைவுகள்**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வளர்ச்சிக்கு சவாலான ஒன்றாகவே காணப்படுகின்றது.

ஆனால் ஒரு சில அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களே இச் செயற்பாட்டில் அதிக அக்கறை செலுத்துகின்றது. இது தவிர்க்கப்பட்டு முற்று முழுதாக சமூகத்தில் சேவையாற்றும் அனைத்து அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இதில் முக்கிய கவனம் செலுத்தி சகல தரப்புக்களுக்கும் அதாவது சாதாரண மக்கள் முதல் உயர்ந்த புத்திஜீவிகள் வரையில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திச் செயற்பட வைப்பதன் ஊடாக யாழ் குடாநாட்டை குறிப்பிட்ட அளவுக்கு காலநிலைப் பாதிப்புக்களிலிருந்து பாதுகாக்க முடியும். இதே போன்று சமூக மக்களும் காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கான பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட முடியும்.

1 வீடுகளில் மரங்களை நாட்டல் 2தமது கழிவுப் பொருட்களை பொதுவான இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்தல், 3 பிளாஸ்திக பொருட்களின் பாவனையைக் குறைத்தல், 4 வீட்டுத் தோட்டச் செயற்பாடுகள் மற்றும் விவசாயத் தேவைக்கு இயற்கைப் பசளையையும் இயற்கை கிருமிநாசினிகளையும் பாவனை செய்தல், 5 மின்சாரத்தை சிக்கனமாகப் பாவித்தல், 6 பெற்றோல், டீசல், மண்ணெண்ணை போன்ற எரிபொருட்களின் பாவனையை இயன்றளவுக்குக் குறைத்தல் போன்ற செயற்பாடுகளால் சாதாரண மக்களும் காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கான பங்களிப்பினை மேற்கொள்ள முடியும் என்பதை உணர்து கொள்ள முடியும்.

இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக முன்னெடுக்கப்படாதவிடத்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் யாழ் குடாநாட்டின் சகல விடயங்களிலும் காலநிலை மாற்றம் என்பது எதிர்மறையான தாக்கத்தைச் செலுத்த குடாநாட்டின அபிவிருத்தியை கேள்விக் குறியாக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

## சூழலைப் பாதிக்கும் செயற்பாடுகளைத் தவிர்ப்போம்

**தி.திருசாந் (SOND)**

# ராசி பலன்

**17-08-2009 முதல் 22-08-2009 வரை**

**பொ.சந்திரலிங்கம்**

### மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

### இடபம்

கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவுவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

### மிதுனம்

மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர். அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம்.

அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்காது.

### கடகம்

புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முத லீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

### சிம்மம்

மகம், பூரம், உத்தரம் 1

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பபு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

### கன்னி

உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளகூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

### துலாம்

சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

### விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதாமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய்நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு தாமதாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளாய் லாபம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

### மகரம்

உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறைநிலவும். உறவினர்அயலவர்விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மோலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

### கும்பம்

அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

### மீனம்

பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம் தந்தை நல மில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் உடைமை மாற்றப்படாமையும் வீடமைப்புப் பணிகள் தாமதிக்கக் காரணம்

## பருத்தித்துறை பிரதேச சபைச் செயலர் தெரிவிப்பு

கரவெட்டி, ஓக.17

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 'நேர்ப்' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்கள் தாமதமடைய காணிகள் உரியவர்களின் பெயர்களில் இல்லாமையும் ஒரு காரணம்.

இவ்வாறு பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலர் கவலை தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

பெயர்மாற்றம் செய்யப்படாத காணிகளில் வீடுகள் அமைக்கும் சந்தர்ப்பங்களிலும் நிறுவனங்களின் திட்ட வரைபுகளுக்கேற்ப வீடுகள் அமைக்கப்படும் சந்தர்ப்பங்களிலும் வீட்டுத்திட்ட அனுமதி வழங்குவதற்குத் தாமதம் ஏற்படுகின்றது.

இதற்குக் காணி உரிமை மாற்றம் செய்யப்படாமை பிரதான காரணியாக உள்ளது.

இதேவேளை உரிமை மாற்றம் செய்யப்பட்ட காணிகளில் வீடமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் போது தாமதங்கள் ஏற்படுவது மிகவும் குறைவாகவே இருக்கும் என்றும் இதற்கான அனுமதிகளும் விரைவில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (203- 70)

## வீதி புனரமைக்க நடவடிக்கை

கரவெட்டி, ஓக.17

வடமராட்சி வடக்கு முதலாம் கட்டை - தம்பசிட்டி வீதியைப் புனரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் புலோலி வடக்கில் வீரபத்திரர் கோயில் வீதி திருத்தல், கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் அமைத்தல் போன்றவற்றுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-70)

# இந்தியாவை சுற்றிவளைப்பதற்காகவே இலங்கையில் காலூன்றுகின்றது சீனா!

கொழும்பு, ஓக.17

இந்தியாவை தந்திரோபாய ரீதியில் சுற்றி வளைப்பதற்காகவே இலங்கை - உட்பட பல ஆசிய நாடுகளில் சீனா துறைமுகங்களை அமைத்து வருகின்றது என இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் சுரேஸ் மேத்தா தெரிவித்திருக்கிறார். அவரது இந்தக் கருத்து இராஜதந்திர வட்டா ரங்களில் சர்ச்சையை ஏற்படுத்தியிருக் கின்றது. இது தொடர்பாக இந்திய கடற்படைத் தளபதி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்து சமுத்திரத்தில் இந்திய கடற்படை சீனாவைப் பொறுத்தவரை எட்ட முடியாததாகவுள்ளது. இதனால் இந்திய கடற்படையின் பிரசன்னம் குறித்து சீனா அதிருப்தி கொண்டுள்ளது.இந்திய கடற்படையின் பிரசன்னம் கார ணமாக சீனாவால் இந்து சமுத்திரத்துக்குள் நுழைய முடியாமலுள்ளது.

இதன் காரணமாக இலங்கை, பாகிஸ்தான், மியன்மாரில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த - தங்கியிருக்கக் கூடிய - துறை முகங் களை சீனா அமைத்து வருகின்றது. இந்து சமுத்திரத்துக்குள் நுழைவதும் பெருமளவில் நிலை கொண்டிருப்பதுமே இதன் நோக்கம். என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(சி)

## சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.17

மகளிர் அபிவிருத்தி நிலையம் சட்ட விழிப்புணர்வு தொடர்பாக நடத்திவரும் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் இன்று திங்கட்கிழமை 'இலங்கையில் ஜனநாயக நீரோட்டத்தில் பெண்களின் தலைமை' என்னும் தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

நாளை காலை 9மணிக்கு நவாலி வடக்கு மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் நிலையப் பிரதிகளான சட்ட உதவியாளர் நகுலேஸ்வரி இராமச்சந்திரன், திட்ட அலுவலர் வேலாயுதம் சுவேந்தினி ஆகியோரும் வளவாளர்களாக தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர் திருமதி த.வில்வநாதன், சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆகியோரும் கலந்து கொள்வர். (203)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.17

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசாரத் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மா.நா.பரமேஸ்வரன் 'நாள் என் செய்யும் வினைதான் என் செய்யும்' தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் விசேட நிகழ்வாக திருமதி புஸ்பநாதன் யோகேஸ்வரியின் இசைக் கச்சேரியும் சீரணி நாகம்மாள் அறநெறிப்பாடசாலை, சண்டிலிப்பாய் சிவசாயி சித்திரக் கோட்ட அறநெறிப் பாடசாலை, ஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலை மருதனார்மடம் ஆகிய அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

* * *

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு வயலின் கச்சேரி இடம்பெறவுள்ளது. வயலின்- ஆர்.இராதாகிருஷ்ணன், கே.குகபரன், திருமதி றஜீவி ஜெகன், செல்வி கார்த்திகா யோகராசா, மிருதங்கம்- எம். சிதம்பரநாதன், வி.ரமணா, கெஞ்சிரா- செல்வன் கே.நந்தகுமார், முகர்சிங்- எம்.சதீஸ்குமார்.

* * *

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் ''கானகதா வாரிதி'' பிரம்மஸ்ரீ சிவ. வை.நித்தியானந்த சர்மா 'கம்பராமாயணம்' என்னும் தலைப்பில் தொடர் இசைச் சொற்பொழிவை நிகழ்த்தி வருகிறார்.

இன்று திங்கட்கிழமை ''விபீஷணன் சரணாகதி'' என்னும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு இடம் பெறும்.

(201)




# நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

## நல்லருள் தருவாய் நாளும்

மந்தையைக் கூட்டிச் சென்று
மரத்திலே நீ அமர்ந்து
மூதாட்டி ஔவைக்காக
பழம் தந்தாய் ஞான வேலா!

விரும்பிய குறத்தி வள்ளி
திருக்கரம் பற்ற எண்ணி
கிழவனாய் நீயும் வந்து- அவள்
கரம் பற்றி மகிழ்ந்தாய் அன்று....

இன்னல்கள் பல எம்முன்
இறைஞ்சினோம் நாமுமின்று
நல்லையில் அருளும் வேலா
நல்லருள் தருவாய் நாளும்....

- இரா. ஷிவதர்சினி, யாழ்.பல்கலைக் கழகம்.

## சேந்தனே எங்களைக் காத்திடுவாய்!

செந்தமிழ் தந்தவன் நீயல்லவா
சிவனுமை பயந்த சேயல்லவா
தந்தைக்கு மந்திரம் சொன்னவனே
தரணியைக் காத்திடும் மன்னவனே
நந்தா வரமருள் குமரேசா
நல்லையில் ஆட்சிசெய் அழகேசா
சிந்தையில் அமைதியைத் தேக்கிடுவாய்
சேந்தனே எங்களைக் காத்திடுவாய்!

- நயினை இராகுலன்.

## வேலினைத் தொழுது வேலவன் அருள் பெறுவோம்

சூரனைக் கருவறுத்து தேவர்சிறை மீட்டுத் தந்த
காரணன் கரம்பிடித்த வேல்
ஆறுதலையில் முடியும் மார்பினில் ருத்ராட்ச மணி
வேலவன் கரம்பிடித்த வேல்
தேவர் மூவர் யாவர்கட்கும் காவலனாய் வந்துதித்த
அறுமுகன் கரமமர்ந்த வேல்
வேலினைத் தொழுதுநின்று நல்லூரில் கூடி நாமும்
நிறை நலன்கள் பல பெறுவோம் வாரீர்.

-கவிமணி கந்தமுருகேசதாசனார்.

## எமை வாழ்ந்திட வைப்பவனே

(கட்டளைக் கலிப்பா)

ஆடல் பாட லுடன் நல்லூர்ச் சண்முகன்
அரிய சேவற் கொடியுடன் மயில் மீது
நாடி வீதி வலமாய் வருகிறான்
நாமுஞ் சென்றவன் நற்கழ லேத்துவோம்
தேடி நாளும் அடியார்க் கருள் செய்ய
திகழு மெல்லா வுலகமுஞ் சுற்றுவான்
வாழு வோரெம் குறைகளை நீக்கென
வந்து துதிப்போர்க்கு அருளுவான் வேலவன்.

- கலாபூஷணம் வை.க.சிற்றம்பலம்.

## நல்லையம்பதி நாதனே போற்றி

தீராத வினைதீர்க்கும் வள்ளல்
திருவவ தாரத்திருத் தோன்றல்
நேராக விண்ணகம் விட்டு
நெடுங்கால மருள்செய வென்று
நாடியே நலம்பல செய்யும்
நலமான நல்லையம் பதியில்
தேடியே வந்துறை செய்த
நாதனே உன் பதம் போற்றி

வருந்துயர் யாவுமே நீக்கும்
வள்ளலின் திருப்பவனி கண்டு
தோத்திரம் செய்யவே எம்மை
தீண்டாது வினைகளும் அண்டி
கருவிலே உருவாகா வள்ளல்
காப்பானே நலமோடு எம்மை
மருளெலாம் போக்கியே எங்கள்
மனமாயை நீக்குவாம் நன்றே.

- சின்மயி, கோப்பாய்.

## முருகன் திருவடிகள் சரணம்

கார் உறங்கும் மலைகளிலே
களனி எங்கும் நெல்லுறங்கும்
நீர் உறங்கும் குளங்களிலே
நின்று உறங்கும் தாமரைப் பூ!
பார் உறங்கிப் போகாமல்
பார்த்தருளும் நல்லைக் கந்தா- உன்
சீர் உறங்கும் திருவடிகளைச்
செயல் ஒடுங்கித் துதிக்கின்றோம்.


- புலவர் செ.பரசுநாதன், தாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவிலக்குத் தாமதமும் கருவளைச் சிகிச்சையும்

கேள்வி: பெண். வயது 29. கடந்த ஒரு வருடமாக எனக்கு மாதவிலக்கு ஒழுங்காக வருவதில்லை. திருமணமாகியுள்ளேன். கருவளத்துக்காக (fertility) சிகிச்சை பெற்று வருகின்றேன். மருத்துவர் கருத்தடை மாத்திரைகளை 4மாதம் உபயோகிக்க அறிவுறுத்தியுள்ளார். செயற்கை முறையில் கருவுற (IVF என்கின்ற Invitro fertilisation) முயன்று வருகின்றேன். அடுத்த மாதவிலக்கு ஆரம்பத்திலிருந்து Clomid மாத்திரைகளை உபயோகப்படுத்த வைத்தியர் உத்தேசித்துள்ளார். எனது பிரச்சினைக்கு சரியான வழியில் மருத்துவ சிகிச்சை நடைபெறுகின்றதா என்பதை அறிய உங்கள் கருத்தை அறிய ஆவலாயுள்ளேன்.

பதில்: நீங்கள் திருமணமானவர். திருமணமாகி குழந்தை இல்லாமல் ஒரு சில காலம் இருக்கின்றீர்கள். அதனால் கருவள சிகிச்சை செய்கின்றீர்கள் என்பதை உங்கள் குழப்பமான கடிதத்திலிருந்து ஊகிக்க வேண்டியுள்ளது. நீங்கள் தற்பொழுது பெற்றுக் கொண்டிருக்கின்ற சிகிச்சை கருவளத்துக்கான சிகிச்சை தான். தங்களது மாதவிலக்கு வட்டத்தை முதலில் நேர்ப்படுத்தவே கருத்தடை மாத்திரைகளை 4 மாதத்துக்கு தொடர்ந்து உட்கொள்ள உங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாதவிலக்கு ஒழுங்காக ஏற்படத் தொடங்கியவுடன் உங்கள் சூலகத்திலிருந்து முட்டைகளை உற்பத்தியாக்கி வெளியேறச் செய்வதற்குக் தான் clomid மாத்திரைகள் உபயோ கிக்கப் ப்டுகின்றன. இந்த மாத் திரைகள் உபயோ கிக்கப் படும்போது யோனிப் பாதை வழியாக ஸ்கேன் செய்யப்பட்டு (Transvaginal Scan) முட்டைகள் வெளிவரும் காலம் அறியப்படும். அநேகமாக Clomid மாத்திரைகளை உபயோகித்து 9 நாட்களின் பின்னர் இந்தப் பரிசோதனை நடத்தப்படும். முட்டை உருவாவது தெரிந்தால் அந்த அடுத்த காலப்பகுதியில் உடல் உறவு கொள்வது மூலமோ அல்லது செயற்கை முறை சினைப்படுத்தலுக்கு தேவையான முட்டைகளை சூலகத்திலிருந்து பெறுவது மூலமோ கருத்தரிப்புக்கு முயற்சி மேற்கொள்ளப்படும். இதற்கு முன்னர் சூலகத்திலிருந்து கருப்பைக்கு முட்டை செல்லும் வழியான பலோப்பியன் குழாய்களில் அடைப்புகள் எதுவும் இல்லை என்பது நிச்சயப்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். செயற்கை முறை சினைப்படுத்தலுக்கு இது அவசியமில்லை. உடலுறவு மூலம் சினைப்படுத்த இது கட்டாயம் தேவை.உங்களுக்கு மாதவிலக்குக் கோளாறு இருப்பதால் polcystic ovary என்கின்ற சூலக கட்டிகள், தைராய்ட் சுரப்பு பிரச்சினை என்பவற்றுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்ட பின்னரே clomid சிகிச்சை செய்வது உகந்தது.




***

கேள்வி: பல்கலைக்கழக மாணவன் வயது 21. எனது மார்பகம் பெண்களின் மார்பகம் போன்று வீங்கி உள்ளது. இதனால் எனது சகமாணவர்களால் கேலிக்குள்ளாக்கப்படுகின்றேன். பொதுவிடங்களை உல்லாசப் பயணங்களை இந்த வெட்க உணர்வால் தவிர்த்து வருகின்றேன். சத்திரசிகிச்சை செய்யமட்டும் சொல்லாதீர்கள்; என்னிடம் அதற்கு வசதியில்லை.

பதில்:வளர் இளம் பிராயத்தில் சில ஆண்களின் மார்பகங்கள் பெண்களைப் போன்று பெரிதாவதுண்டு. இது சாதாரணமானது. ஒரு சில மாதங்கள் இப்படி இருந்து விட்டு தானாகவே மறைந்து விடுவதுண்டு. ஒரு சில ஆண்களுக்கு 50 வயதிற்கு பின்னர் மார்பகங்கள் பெருப்பதுண்டு. இதற்கு அவர்களின் Testosteron எனப்படும் ஆண் ஹோர்மோன் சுரப்பு குறைவதே காரணமாக கருதப்படுகின்றது. ஈரல் நோய்கள், சில ஹோர்மோன் வைத்திய சிகிச்சைகள், போதைப்பொருள் பாவனை, நிறைய பியர் குடிப்பது என்பதனாலும் மார்பகம் பெருக்கலாம். முன்னர் கூறிய வண்ணம் ஒரு சில காலத்துக்குப் பின்னர் உங்கள் பிரச்சினை தானாகவே குணமாகும். தொடர்ந்து இந்தக் கோளாறால் - மனச் சஞ்சலம், தாழ்வு மனப்பானமை ஏற்படும் என்றால் - சத்திர சிகிச்சையைத் தவிர வேறு வழியில்லை. அரசாங்க மருத்துவ மனைகளிலேயே செலவு ஏதுமின்றி இந்த சிகிச்சையை மேற்கொள்ளமுடியும். ஒரு சில சத்திர சிகிச்சை நிபுணர்கள் வெட்டுக்காயம் வெளியே தெரியாதபடி - கீழ்ப்புறமாகவோ- பக்கவாட்டாகவோ வெட்டி - இந்த பெருப்பத்திற்கு காரணமான - கொழுப்புப் படையை அகற்றுவர். கொழும்பு போன்ற மேம்பட்ட தனியார் வைத்திய நிலையங்களில் Liposuction என்ற உறிஞ்சி எடுக்கும் முறையில் - கொழுப்புப் படை அகற்றப்படுகிறது. எனவே தயக்கமில்லாமல் உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள்.

***

கேள்வி: ஆண் வயது 30. எனக்கு கடந்த ஒரு வருடமாக - Anxety என்கின்ற மன பதைபதைப்பும், வயிற்றில் அமில அதிகரிப்பும் (Acidity) உண்டு. பதை பதைப்புக்கு - மன அமைதி தரும் மாத்திரைகளும் (Anxiolytics), அமிலத்தன்மைக்கு மருந்துகளும் எடுத்து வருகின்றேன். சில வேளைகளில் எனது இருதயத்துடிப்பு 60 துடிப்புகளுக்கு குறைவாக இருக்கின்றது. அடிக்கடி ஏப்பம் விட்டு வயிற்றில் உள்ள காற்றை வெளியேறச் செய்வேன். எனது பதைபதைப்புக்கும் வயிற்று அமிலத்துக்கும் தொடர்பு உண்டா? பரிகாரம் கூறவும்.

பதில்: Anxiety ஐ கலக்கமான மனநிலை என்று கூறுவார்கள். இதனால் மனம் பதைபதைக்கும். அது நடக்குமோ? நடக்காதோ? என்று இரண்டும் கெட்டான் மனநிலையில் - அவதிப்படுவது தான் Anxiety. உதாரணமாக, பரீட்சை முடிவுகள் வெளியாகும் போது எதிர்பார்த்து நிற்கும் மனோநிலையை இதற்கு ஒப்பிடலாம். அதுவும் ஒருவித பதற்ற நிலைதான். ஆனால் ஆரம்பத்தில் ஒரு சில நிமிடநேரம் நின்றுவிட்டு மறைந்துவிடும். தற்காலிக மனோநிலை அது. ஒரு சிலருக்கு - எதிர்பார்ப்புகளை அவற்றின் விளைவுகளை தொடர்ந்து சிந்தித்து சிந்தித்து - இந்த மனோநிலையே - நோயாகிவிடும். அப்பொழுது அதனை Anxiety Disorders என்று கூறுவர். இப்படியான மனோ நிலையின் போது ஒருங்குபடுத்தி சிந்திக்க வைக்கமுடியாது. நெஞ்சு படபடக்கும். cold sweat என்கின்ற குளிரான வியர்வை உண்டாகும் (சாதாரணமாக - வெளிவெப்பம் அதிகரிக்கும் போது தான் வியர்வை ஏற்படுவதுண்டு). இங்கு உடல் குளிர்ந்த நிலையில் கை -கால்கள் பாதம், வியர்க்கும். நாக்கு வரண்டு போகும். இந்த குணம் குறிகளின் கூட்டில் ஏற்படும் நோய் நிலைதான் Anxiety. இதன்போது - இரைப்பையினுள் அமிலம் நிறைய சுரப்பதுண்டு. இதனால் வயிறு எரிதல், உணவு தொண்டைக்குள் ஏறி வருதல், எளிதில் சமிபாடு ஏற்படாதிருத்தல் - ஏப்பம் என்பவை உண்டாகும். இதனால் Acidity என்று நீங்கள் கூறுகின்ற Gastro Oesophageal Reflux Disease என்று மருத்துவ உலகில் அழைக்கப்படுகின்ற நோய் நிலை உருவாகும். அதே வேளையில் - இப்படியான Acidity



உள்ளவர்களுக்கு Anxiety யும் ஏற்படுவதுண்டு. முட்டை முந்தியதா? கோழிமுந்தியதா? என்ற மாதிரி Anxiety ஆல் Acidity வந்ததா அல்லது Acidity ஆல் Anxiety வந்ததா என்பது இன்றுவரை மருத்துவரிடையே பட்டிமன்ற சமாச்சாரமாய் இருந்து வருகின்றது. உங்கள் வயதை வைத்து நோக்குமிடத்து உங்களுக்கு Anxiety யினால் தான் Acidity ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. இந்த் வயதில் உங்கள் மீது சுமத்தப்படும் பொறுப்புக்கள், உலகம் எதிர்பார்க்கும் கடமைகள், வாழ்க்கையில் முன்னேற முயலும் இளமைத் துடிப்புகள் என்பவை கலக்க மனநிலைக்குக் காரணமாகின்றன. இந்த உணர்வுகள் உங்களைப் பாதிக்காத முறையில் வாழ்க்கை முறையை மாற்றியமைத்துக் கொண்டால் கலக்கம் குறைந்து, அமில சுரப்பும் குறையும். தினசரி உடற்பயிற்சி செய்வது உடலுக்கு களைப்பையும் மனதிற்கு ஆறுதலையும் தரும். யோகாசனம் மற்றும் விளையாட்டுக்களில் ஈடுபாடும் உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும். எனினும் இவை சாதாரணமான கோளாறு என்று கொள்ளாமல் ஒரு தகுந்த வைத்தியரின் ஆலோசனையுடன் இரத்தப்பரிசோதனை Endoscopy என்ற குழாய் மூலம் உட்குடல் சோதிக்கும் பரிசோதனை போன்றவைகளால் Acidity க்கு வேறு காரணங்கள் உள்ளனவா என்று கண்டறியலாம்.

***

பெண் வயது 29. கருத்தரித்து மூன்று மாதத்திற்கு பின்னர் வயிற்றினுள் இறந்த சிசு, சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் பெறுவிக்கப்பட்டது. பிரசவத்தின் பின்னர் தொடர்ந்து பல நாட்கள் இரத்தப்பெருக்கு ஏற்பட்டு கருப்பை சரியாகச் சுருங்காததாலும் கருப்பை சுவர்களில் வீக்கம் இருந்ததாலும் இரத்தப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்று ஸ்கேன் மூலம் கண்டறியப்பட்டது. பின்னர் D/C என்ற வயிறு கழுவுதல் சிகிச்சை செய்யப்பட்டு இப்பொழுது குணமாகியுள்ளேன். குழந்தை வயிற்றினுள் இறந்ததற்கு தொப்புள்கொடி குழந்தையின் கழுத்தைச் சுற்றி குழந்தை மூச்சுத் திணறியதே காரணம் என்று வைத்தியர் தெரிவித்தார். எனது சந்தேகம் என்னவென்றால், அடுத்த குழந்தைக்கும் தொப்புள் கொடி கழுத்தை சுற்றி ஆபத்தை விளைவிக்கும் சந்தர்ப்பம் உண்டா? எவ்வளவு காலத்திற்குப் பின்னர் நான் கர்ப்பம் தரிப்பது நல்லது? உங்கள் விளக்கமான பதிலை எதிர்பார்க்கிறேன்.

பதில்: குழந்தை வயிற்றினுள் இறப்பதற்கு தொப்புள் கொடி கழுத்தை இறுக்குவது ஒரு காரணம் என்றாலும், இந்தக் கோளாறு அடிக்கடி ஏற்படாது. இது ஒரு பரம்பரை நோயுமல்ல. மேலும் இது ஏன்? எப்படி? ஏற்படுகின்றது என்பதற்கு நிரூபிக்கப்பட்ட மருத்துவ காரணங்கள் எதுவும் இல்லை. குழந்தை கருவறையில் அவ்வப்போது சுழன்று திரும்பும் போது இப்படி ஏற்படுவதாக நம்பிக்கை இருந்தாலும் இது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. என்ன காரணத்தினாலோ கழுத்தைச் சுற்றி தொப்புள் கொடி அமையும் போது- எட்டுமாத கர்ப்பகாலத்தின் குழந்தை கர்ப்பப்பை வாசலை நோக்கி நகரும் வேளை தொப்புள் கொடி குழந்தையின் கழுத்தை இறுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் குழந்தையின் மூளைக்கு செல்ல வேண்டிய இரத்தோட்டம் குறைந்து, இருதய துடிப்பு தடையாகி மரணம் சம்பவிக்க ஏதுவாகிறது. சில வேளைகளில் பிரசவத்தின் போது தொப்புள் கொடி கழுத்தில் சுற்றப் பட்டிருந்தால் குழந்தை யோனிப்பாதையால் வெளியே பிரசவம் ஆகும் போது கழுத்து இறுகலாம். ஆனால் பிரசவ வைத்தியர் அந்த இறுக்கும் கொடியை இலாவகமாகக் கழற்றி அல்லது அறுத்து பிரசவம் செய்வார். கருப்பையில் இருக்கும் போது தான் கழுத்தை சுற்றிய தொப்புள் கொடி பிரச்சினை தரும். ஸ்கேன் செய்வது மூலம் முன்னரே கண்டறியலாம். அத்துடன் 8 மாத கர்ப்ப காலத்தின் பின்னர் தாய் பிள்ளையின் துடிப்பை அடிக்கடி கணக்கெடுத்துக் கொள்வதன் மூலம் பாதுகாத்துக் கொள்ள முடியும். இதனை Kick Chart - சிசுவின் உதைக்கணிப்பு என்று கூறுவார்கள். 12 மணித்தியால இடைவெளியில் குழந்தை குறைந்தது 10 தடவையாவது உதைக்க வேண்டும். 48 மணி நேரத்தில் 10 தடவையாவது உதைக்காவிடின் அல்லது தொடர்ந்து 12 மணிநேரத்திற்கு சிசு அசைவற்று கிடப்பதாக தாய் உணர்ந்தால் குழந்தைக்கு தேவையான ஒட்சிசன் செல்லவில்லை என்பது உறுதி. இதற்கு தொப்புள் கொடி சிசுவின் கழுத்தை இறுக்குதல் ஒரு (கவனிக்கவும்) காரணம். இப்படியான வேளையில் இதனை உறுதிப்படுத்த CTG என்கின்ற தொடர் சிசு அசைவு பரிசோதனை நடத்தப்பட்டு நிலைமை கடுமையாக இருந்தால் சிசேரியன் முறையில் குழந்தை பிரசவிக்கப்படும். எனவே அடுத்த தடவை இப்படி நேரும் என்பது நிச்சயமில்லை. பயமின்றி நீங்கள் குழந்தை பெறலாம். கடந்த பிரசவத்தின் போது நிறைய இரத்தப்பெருக்கு ஏற்பட்டதால் உங்களுக்குப் பிரசவத்தின் பின்னர் போஷாக்கான உணவு அவசியம் தேவை. குறைந்தது அடுத்த இரண்டு மாதங்களுக்காவது வைட்டமின், இரும்புச் சத்து மாத்திரைகள் எடுக்கவும். இன்னும் ஒன்றரை மாதத்திற்கு கருப்பை சாதாரண நிலை அடையும் வரை உடலுறவைத் தவிர்க்கவும். சத்திர சிகிச்சை செய்து ஒரு வருடம் கழித்து கர்ப்பம் தரித்தால் பிரச்சினை இல்லை.



***


இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம் பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

11. **பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை எழுதுக.**
 1) Bridge - ..............................................
 2) I like Rice and Curry - ..............................................

12. **பின்வரும் சொற்களின் ஆங்கில வடிவத்தை எழுதுக.**
 1) உனக்கு என்ன விருப்பம்?
 ..............................................
 2) நான் நாளை வருவேன்
 ..............................................

13. **மிகச்சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**
 01) பின்வருவனவற்றில் இயல்பாக முகத்தைக்காட்டும் படம்,
 1)  2)  3)  4) 

 02) சிறிய ஒலியையும் கேட்கும் தன்மையுள்ள பிராணி,
 1) மான். 2) கிளி. 3) பாம்பு. 4) முயல்.

 03) கூர்மையான பார்வை உடைய பிராணி,
 1) ஆமை. 2) பருந்து. 3) யானை. 4) பாம்பு.

 04) ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் பிராணி அல்லாதது,
 1) ஆமை. 2) நத்தை. 3) கடலாமை. 4) கழுகு.

 05) பின்வருவனவற்றில் எதை அவதானிப்பதன் மூலம் உளத்திருப்தி கிடைக்கும்?
 1) பறவைகள். 2) நாய்.
 3) பூனை. 4) வளர்ப்பு மீன்.

 06) இலங்கைக்கு கிழக்கே அமைந்துள்ள நாடு,
 1) இந்தியா. 2) சீனா.
 3) இந்து சமுத்திரம். 4) மலேசியா.




 07) அங்கீகரிக்கப்பட்ட தரமான பண்டம் என்பதற்கான ஆதாரம்,
 1) ISO 2) ISI 3) E எண் 4) ISV

 08) வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்கள் அல்லாதது,
 1) சோளம். 2) பூசணி.
 3) புடோல். 4) வட்டுக்கத்தரி.


 09) கிழங்குப் பயிர்களில் சேதம் ஏற்படுத்தும் பிராணி,
 1) எலி. 2) மிலி மூட்டைப்பூச்சி.
 3) தண்டு கோதி. 4) பனிப்பூச்சி.

 10) காந்தம் ஒன்றின் இரு முனைகளை அருகருகே கொண்டு சென்றபோது அவை ஒன்றை ஒன்று கவர்ந்தன எனின், அவ்விரு முனைகளும்,
 1) ஒத்த முனைகள். 2) ஒவ்வாத முனைகள்.
 3) நேர்முனைகள். 4) மறை முனைகள்.

14. **பின்வருவன சரியாயின் "√" எனவும், பிழையாயின் "X" எனவும் அடையாளம் இடுக.**
 01) அம்பக்கை செதுக்கல் வேலைக்கு பிரசித்தி பெற்ற இடமாகும். ( )
 02) இலுப்பை ஐப்பசி மாதம் பூக்கும். ( )
 03) உதைபந்தாட்ட அணியில் 1 அணியில் விளையாடும் வீரர் தொகை 15 ஆகும். ( )
 04) மஞ்சள்காமாலையை குணமாக்க காசித்தும்பை உதவும். ( )
 05) பம்பரகந்த நீர்வீழ்ச்சி வளவகங்கையில் அமைந்துள்ளது. ( )
 06) சிவப்பரிசித் தவிட்டில் விற்றமின் C அதிகம் உண்டு. ( )
 07) சுடுநீரில் சவர்க்காரம் விரைவாகக் கரையும். ( )
 08) இலங்கை குடியரசானது 1948இல் ஆகும். ( )
 09) கருவாட்டில் கல்சியம் அதிகம் உண்டு. ( )
 10) அரசாங்க தகவல்களைப் பெற 1919இற்கு அழைக்க வேண்டும். ( )

15. **மிகச்சரியான விடையினை எழுதுக.**
 01) X, L, V, I ஆகிய உரோம எண்களைக்கொண்டு உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.
 ..............................................
 02) சரோஸ் ஒவ்வொரு நாளும் காலை, மதியம், இரவு வேளைகளில் தலா 4 கணக்குப்படி செய்தான் எனின், அவன் 8 நாளில் செய்யும் கணக்குகள் எத்தனை?
 ..............................................
 03) இச்சதுரத்தின் பரப்பளவு $49cm^2$ எனின், இதன் சுற்றளவு யாது?
 
 ..............................................
 04) இந்த இறப்பர் பட்டியின் நீளம், அகலம் தலா 1cm ஆகும் எனின், இதன் பரப்பளவு என்ன?
 
 ..............................................
 05) 304 மாபிள்களையும், 125 மாபிள்களையும் 3 சம பொதியில் அடைத்தால் ஒரு பொதியில் எத்தனை மாபிள்கள் காணப்படும்?
 ..............................................
 06) 3/5 - 4/10 = ..............................................
 07) 1kg பருப்பு 84/= படி 2.75kg பருப்பின் விலை என்ன?
 ..............................................
 08) 0.6 + 0.09 + 1.85 = ..............................................
 09) □□□□□□
 இத்தள வடிவங்களைக் கொண்டு உருவாக்கக்கூடிய திண்ம வடிவத்தின் உச்சிகள் எத்தனை?
 ..............................................
 10) இப்படத்தில் இரண்டு சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.
 

16. **பின்வரும் அட்டவணையை அவதானித்து விடையளிக்குக.**
**(மாணவர்கள் விரும்பும் பழம் பற்றிய தரவு தரப்படுகிறது)**




 1) அதிகமானோர் விரும்பும் பழம் எது? ..............................................
 2) வாழைப்பழத்தை விரும்பியோர் பலாப்பழத்தை விரும்பியோரின் இரு மடங்கு எனின், அதை வரைந்து காட்டுக.
 ..............................................
 3) பலாப்பழத்தை விட, மாம்பழத்தை எத்தனை பேர் அதிகம் விரும்புகின்றனர்?
 ..............................................
 4) முக்கனிகளை விரும்புவோர் தொகை என்ன?
 ..............................................

16. **"டெங்கு நோய் விரைவாகப் பரவி வந்தது. அப்போது நாங்கள் .........." எனும் கருப்பொருளில் திருத்தமான எழுவாய், பயனிலைகளுடன் நான்கு சொற்களுக்குக் குறையாத ஆறு வாக்கியங்கள் எழுதுக.**
 1) ..............................................
 2) ..............................................
 3) ..............................................
 ..............................................
 4) ..............................................
 ..............................................
 5) ..............................................
 ..............................................
 6) ..............................................
 ..............................................

**நிறைவுற்றன.**

## கடந்த 15.08.2009 உதயன் நாளிதழில் வெளியான விசேட புலமைப்பரிசில் பரீட்சை வெளியீடு 05 இன் விடைகள்

### வினாத்தாள்-I

01 - 3, 02 - 1, 03 - 2,3, 04 - 3, 05 - 3, 06 - 2, 07 - 1(விடை 1 இல் ரூபா 1 நாணயங்கள் 3 என வரவேண்டும்), 08 - 3, 09 - விதிகள், 10 - பக்கங்கள், 11 - 2, 12 - 1, 13 - 3, 14 - 1, 15 - 2, 16 - 2, 17 - 3, 18 - 2, 19 - 1, 20 - 2, 21 - 1, 22 -3,23 - 3, 24 - 3, 25 - 3, 26 - 2, 27 - 2, 28- 2, 29 - 3, 30 - 2, 31 - 1, 32 - 3, 33 - 3, 34 - ஆண்கள், 35 - 2, 36 - மழை பொழிந்தது, வெள்ளம் பெருக்கு எடுத்தது, 37 - 12, 38 - 36, 39 - 16, 40 - விமலா.

### வினாத்தாள்-II

01. 01 - மிருகக்காட்சிச்சாலை, 02 - பறவைகள்/ மிருகங்கள்/ குரங்குகள்,
03 - குரங்குகள் இனிப்புப்பையைப் பறித்தபடியால், 04 - நாம்/ நாங்கள்,
05 - பார்த்து வியப்படைந்தேன், 06 - அவள்/ சிறுமி, 07 - நான், 08 - நாங்கள் குரங்குகளைப் பார்ப்போம், 09 - ஆபூர்வ, 10 - கை
02. நாங்கள் பயத்தினால் பாதுகாப்பான இடத்தைத் தேடிச்சென்றோம்.
03. பிற்போடப்படும் எக்காரியமும் நிறைவேறுவதில்லை. 04.1 - தசாவதானி, 2 - அநாதை
05. கடற்பயணம் 06"ஐயோ! வீடு எரிகிறதே!" என்று கமலா சத்தமிட்டாள். 07. ஓலை
08. அக்கினி. 10. 1 - Railway Station, 2 - Stomach, 3 - Leaves
11. நான் தாவரங்களுக்குத் தண்ணீர் விடுகின்றேன். 12. Eating
13. கதையை வாசியுங்கள். 14. ஆயெத் என்ன.
15. 1 - எருக்கலை, 2 - முட்கீரை. 16. 1 - பாதசாரிகள் கடவை, 2 - வாகனத் தரிப்பிடம்
17. 1 - றோசா, 2 - நொச்சி 18. 1 - சந்திர வட்டக்கல், 2 - தலதா மாளிகை,
19 - 3, 20 - 4, 21 - 1, 22 - 2, 23 - 1, 24 - 3, 25 - 4, 26 - 2, 27 - 4, 28 - 2, 29 - 1, 30 - 3, 31 - 1,4, 32 - 2, 33 - 4, 34 - 3, 35 - 2, 36 - 1, 37 - 2, 38 - 91, 39 - 71, 40 - 35, 41 - 396, 42 - வரைபில் குறித்தல், 43 - 8000 ரூபா, 44 - ரூபா 19,50, 45 - காலை 7.40, 46 - 19600 ரூபா, 47 - 5/ 250m/ அல்லது 5250ml, 48 - 0.4, 49 - 02 : 40,14:40,50 - 11cm, 51 - 78cm, 52 - 4.5cm/ 4cm 5mm, 53 - மு.ப 7.40, 54 - 7/9, 55 - ஐம்பதாயிரத்து ஐந்நூற்றெட்டு, 56. 1 - நான்முகி, 2 - 4

**மாணவர்களே! இவ்விடைகள் தொடர்பான தெளிவின்மைகளை நிவர்த்தி செய்ய எமது கல்விச்சுடர் ஆசிரியர் வே.அன்பழகன் (0773068999) தொடர்பு கொண்டு விளக்கங்களைப் பெறமுடியும்.**

**கடந்த 14.08.2009 அன்று வெளியாகிய விசேட மாதிரி வினாத்தாள்-04 இன் விடைக்குறிப்புகளின் திருத்தம்.**
**வினாத்தாள்-I 40-பி.ப 9.35,**
**வினாத்தாள்-II 33-478, 34-44km,**
**35- மகிழூந்து 5 + உந்துருளி 25, 36-18, 37-மு.ப 9.15, 38- $30cm^2$**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் முன்பள்ளி சிறார்களின் ஓவியம், சிற்பக் கண்காட்சியின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
கன்னியர்மடத் தலைவி அருட் சகோதரி பொண பெஞ்சூர் மங்கள விளக்கேற்றுவதையும் அருகே பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ். முன்பள்ளி கோட்டக் கல்வி அதிகாரி க.விமலநாதன், பெற்றோர்கள், ஆசிரியர்கள் நிற்பதை முதலாவது படத்திலும் கண்காட்சியில் சிறார்களுடன் பிரதம விருந்தினர் மற்றும் பெற்றோர், ஆசிரியர்கள் அளவளாவி பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (160)


# பாராட்டி வாழ்த்துகிறோம்



இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடந்த 40 வருடங்களாகச் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும்

**திரு.சி.தெய்வேந்திரன்**

(விசாரணை அதிகாரி -வட மாகாணம்)

அவர்களுக்குப் போக்குவரத்து அமைச்சினால் மேலும் ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கியதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(87881)

வெள்ளை மனம் கொண்ட வெள்ளை வேட்டி ஐயா!
எங்களுடன் அன்பாகப் பழகி பல புத்திமதிகள் கூறி
விசாரணையிலும் நீதியான தீர்ப்பு வழங்கிய தாங்கள்
நீண்ட ஆயுள் உடல் நலத்துடன் வாழ
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

*சாரதி, காப்பாளர், பொறியலர்கள், மன்னார்-வவுனியா சாலை.*


## இந்தியப் பயணத்தை தவிர்க்குமாறு அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 17

இந்தியாவில் பன்றிக் காய்ச்சல் தீவிரமாகப் பரவியதையடுத்து, இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வதைக் கட்டுப்படுத்துமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களைக் கேட்டுள்ளது.

இந்தியாவில் பூனே, மும்பை ஆகிய இடங்களில் பன்றிக் காய்ச்சல் தீவிரமாகப் பரவுவதாகத் தகவல்கள் வெளியாயுள்ளன. இந்தக் காய்ச்சல் ஏனைய மாநிலங்களுக்கும் பரவலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தியாவுக்கு பயணம் மேற் கொள்வதைக் கட்டுப்படுத்தவும் என்று சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுள்ளது.

நாட்டுக்கு வரும் பயணிகள் பன்றிக் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டுள்ளார்களா என்பதைக் கண்டறிய சோதனை செய்வதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட பிரிவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

(1)


# பாராட்டி வாழ்த்துகிறோம்



இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடந்த 40 வருடங்களாக கடமையாற்றி இன்று ஓய்வுபெறும்

**திரு.சி.தெய்வேந்திரன்**

(விசாரணை அதிகாரி-வடமாகாணம்)

அவர்களுக்குப் போக்குவரத்து அமைச்சினால் மேலும் ஒருவருடகால சேவை நீடிப்பு வழங்கியதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(87811)

சிவாஸ் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**தயாபரன் குடும்பத்தினர்.**



# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா செல்லப்பா



கொக்குவிலை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட செல்லம்மா செல்லப்பா 13.08.2009 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும் சோதிமலர் (ராணி-ஜேர்மனி), சிவநேசமலர் (கிளி-கொக்குவில்), குகநேசமலர் (நீலா-திருநெல்வேலி), மல்லிமலர் (சந்திரா-கொக்குவில்), வசந்தமலர் (வசந்தா-ஜேர்மனி), இராசபூபதி(பூபதி- டென்மார்க்), அற்புதமலர் (சுதா-கனடா), சிவானந்தன் (தம்பி- டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், மகாலிங்கம் மற்றும் செல்வரத்தினம், கந்தசாமி, இராசசூரியர், அரியரட்ணம் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நாளை மறுதினம் (19.08.2009) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

அன்றையதினம் அவரின் மகளின் கொக்குவில் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**அ.செல்வரத்தினம்**
(மருமகன்)

''வளர்மதி இல்லம்'',
கொக்குவில்.

(87950)


## வீதி சேதம்

பருத்தித்துறை கல்லூரி வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இவ்வீதியினால் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதைக்காணக்கூடியதாக உள்ளது.

(78)





ராஜாதி ராஜ
ராஜகம்பீர ராஜமாத்ததாண்ட
லக்கிலாண்ட் பிஸ்கட் மன்னன்
குடும்பத்துடன்
யாழ்.நகர் வாரார்! வாரார்!! வாரார்!

நீண்ட கால இடைவெளியின் பின் மீண்டும் யாழ்.நகரில்
அழகிய வர்ணப்பைக்கட்டுக்களில் தரத்தில் அதி உயர்ந்த,
விலையில் மிகக் குறைந்த,இலங்கையில் முதல்தர
பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம்கொண்ட,
லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம்.
விருந்தினர் வீட்டுக்கு வெறும் கையுடன் செல்லுவதா?
விருப்பமுடன் எடுத்துச்செல்லுங்கள். விலையில் மலிந்து,
தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய்த் திகழும்
லக்கிலாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

(இ!560339)

**லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றில் சில**

லக்கிலாண்ட் கிவ்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃப்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கொரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்
லக்கிலாண்ட் பூ, ஜெம்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் நைஸ் என்னும் பல

*Manufactured By:*

**Luckyland**

*Biscuit Manufactures*
Kundasale, Kandy,
Srilanka.


ஏக விநியோகஸ்தர்கள்: **சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 2567



# மரண அறிவித்தல்

## அருட்தந்தை பிலிப். யேசுநேசன் (அ.ம.தி)

(புனித சென்.பத்திரிசியார் முன்னாள் உப அதிபர்)



யாழ்ப்பாணம் புலோலியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை அமல உற்பவம் தற்போதைய தூயமசனட் உயர் குருமட அதிபர் அருட்தந்தை பிலிப்.யேசுநேசன் அடிகளார் அவர்கள்13.08.2009 வியாழக்கிழமை அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி.பிலிப்பையா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான வின்செட், விக்ரோறியா, மாசிலாமணி, அல்போன்ஸ் மற்றும் மாகரேட் (அமெரிக்கா), பெனடிக்ஸ் (யாழ்ப்பாணம்), மரியநேசன் (சுவிற்ஸலாந்து), மற்றில்டா(கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.06.2009) திங்கட்கிழமை புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்

... பெனடிக்ற்.

பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(87946)



# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## சுகுணராசா நிமலன்

(யாழ். இந்து பழைய மாணவன்)



மலர்வு:
22.04.1981

உதிர்வு:
17.08.2006

விழுதுகள் நிலத்தைத் தொடும்வேளை
வேரோடு சாய்ந்ததே ஆலமரம்- உன்
நிழலில் ஆறிய நாமின்று
நிர்க்கதியாகிப் போனோமையா!
சிறகொடிந்த நொண்டிப் பறவைகள் நாமின்று, நீ
வீதியில் சிந்திய குருதியதும்- உன்
கடைசிக் கணத்தின் கதறுதலுமெம் நெஞ்சில்
நித்தம் நித்தம் நிழலாடுதே!
உமது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(இ/560319)

என்றும் உம் நினைவால்வாடும்:
அம்மா, அப்பா, அண்ணா,
அக்கா, தம்பி, மனைவி, மகன்.

காந்தன், நீர்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நீர்வேலி, அச்செழு குடும்ப முன்பள்ளியின் விளையாட்டு நிகழ் வில் விருந் தினர்கள் முன்பள்ளி மாண வர்களின் பான்ட் வாத்திய அணி வகுப்புடன் அழைத்து வரப்படு வதையும் நிகழ்வில் பிரதம விருந்தி னராகக் கலந்து கொண்ட வலிகிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா சிறுமி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# துடுப்பாட்டத்தில் அசத்தியது சென்றலைட்ஸ்! 72 ஓட்டங்களால் நியூஸ்ராரை வீழ்த்தியது!!

வலிவடக்கு,ஓக.17

அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 72 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

அரியாலை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் கந்தர்மடம் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 215 ஓட்டங்களை பெற்றது. செல்ரன் 57 ஓட்டங்களையும் எடின் 56 ஓட்டங்களையும் சுதர்சன் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழக வீரர் முரளி 04 ஓவர்கள் பந்து வீசி 43 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

216 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

தீபன் 32 ஓட்டங்களையும் சயந்தன்26 ஓட்டங்களையும் சிவா 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தயான் 04 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் மதுஷன் 04 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

(04- 86)

# கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டுவில் தெற்கு அ.மி.த.க. மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஓக.17

கொழும்பு டி.எஸ்.ஐ. பாதணி நிறுவனத்தினரால் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட சுற்றுப்போட்டியில் 14வயதுப் பெண்கள் பிரிவில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை அணி மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியில் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பாடசாலை அணிகள் பலவும் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

# முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.17

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள சாவகச்சேரி, மட்டுவில், கைதடி ஆகிய குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மை போட்டி அண்மையில் சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

வலய முன்பள்ளிஉதவிக்கல்விப் பணிப்பாளர் சு. பாக்கியராசா தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு முதன்மை விருந் தினராக கிளிநொச்சி மாவட்ட தென்மராட்சிக் கிளை சாரணர் மாவட்ட ஆணையாளர் லயன் செ. சுப்பிரமணியம் கலந்து கொண்டார். (04)

# றொபேசனின் அதிரடி ஆட்டத்தால் கொக்குவில் மத்திய ச.ச. அணிக்கு வெற்றி

வலி.வடக்கு,ஓக.17

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக வீரர் றொபேசன் ஆட்டமிழக்காது அதிரடியாக ஆடி 38 பந்துகளில் அடித்த 80 ஓட்டங்களால் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 04 விக்கெட்டுக்களினால் வெற்றியைப் பெற்றுள்ளது.

அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம், யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் இருபதுக்கு இருபது கிரிக்கெட்போட்டி ஆட்டத்தில் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் 20 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக சுரேஷ் 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழக வீரர் நிரோஜன் 04 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் நதீஸ்வரன் 04 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

150 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழகம் 18.2 ஓவர்களில் 06 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

06 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்று கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி தடுமாறிய நிலையில் களமிறங்கிய றொபேசனின் அதிரடி ஆட்டமும் ஜெனார்த்தனனின் நிதானமான விளையாட்டும் வெற்றி இலக்கை அடைய வழி செய்தன.

றொபேசன், ஜெனார்த்தனன் ஆகியோர் ஆட்ட மிழக்காது முறையே 80, 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

திருநெல்வேலி விளையாட்டுக் கழக வீரர் பிரதீஸ் 04 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியில் றொபேசன், ஜெனார்த்தனன் 118 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று ஒரு புதிய சாதனையை இப் போட்டியில் ஏற்படுத் தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (04 - 86)

# பெண்களுக்கான எல்லே போட்டியில் வடமாகாணச் சம்பியனானது அருணோதயா

வலி.வடக்கு,ஓக.17

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தினால் வடமாகாண மாவட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான எல்லே போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வவுனியா மாவட்ட மடுக்கந்தை சிங்கள தேசிய பாடசாலையும் யாழ். மாவட்ட அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய அருணோதயக் கல்லூரி வீராங்கனைகள் 04 ஓட்டங்களைப் பெற்று அனைவரும் ஆட்டமிழந்தார்கள். சி.நிசாந்தி, செ. அர்ச்சனா, இ. காவேரி, இ. ஜக்சனா ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

05 ஓட்டங்களை வெற்றி இலக்காக்கிக் கொண்டு பதிலுக்கு விளையாடிய வவுனியா மடுக்கந்தை தேசிய பாடசாலை வீராங்கனைகள் ஓர் ஓட்டத்தை மாத்திரமே பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர்.

இதனால் ஆட்ட நிறைவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 04:01 என்ற ஓட்டங்களினால் வவுனியா மடுக்கந்தை தேசிய பாடசாலையை வெற்றி பெற்று மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டதுடன் தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவும் தகுதி பெற்றுள்ளது. (04- 86)

# மாகாணத் திணைக்களம் நடத்தும் போட்டிகள்; எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில்

வலி.வடக்கு,ஓக.17

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்டங்களுக்கு இடையே நடத்தப்படவுள்ள விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும் 4,5,6ம் திககளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.


தடகளப் போட்டிகள், கபடி ,வலைப்பந்தாட்டம், கிரிக்கெட், உதைபந்தாட்டப் போட்டிகள் என்பன யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண விளையாட்டுத் திணைக்கள விளையாட்டு உதவிப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் யாழ். மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ் மாவட்ட செயலக விளையாட்டு அலுவலர் திருமதி ஜே.எப்.எ.ரூபசிங்கம், வடமாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை மற்றும் யாழ் .மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் விளையாட்டு அலுவலர்கள் விளையாட்டுச் சங்கங்களின் பிரதி நிதிகள் ஆகியோர் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்கள்.

(04- 86)





திருநெல்வேலி சிவசக்தி பாலர் பாடசாலையின் விளையா[illegible] போட்டி இடம்பெறுவதையும் பாடசாலை ஆசிரியர்களுடன் சிறுவர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



திருவருள்மிகு சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

# பரிவார மூர்த்தி ஸ்ரீ மகா காளி அம்பாள்

# கலச சங்காபிஷேக விஞ்ஞாபனம் - 2009

## மங்களகரமான விரோதி வருடம் ஆவணி முதல் நாள் (17.08.2009) திங்கட்கிழமை


**தேவிதுதி**

மேதாஸிதேவி விதிதாகில - சாஸ்த்ர - ஸாரா
துர்க்காஸிதுர்க்க - பவஸாகர - நௌ - ரஸங்கா!
ஸ்ரீ! கைடபாரி ஹ்ருதயைக - க்ருதாதி வாஸா
கௌரீ த்வமேவ சசி மௌலி - க்ருத - ப்ரதி ஷ்டா!!
(தேவி மாஹாத்மியம் அத் 04 சுலோகம் 11)

தேவி! சாஸ்திரங்கள் அனைத்தின் சாரத்தையுணரும் புத்தி வடிவினள் நீ!
கடந்தற்கரிய பிறவிக் கடலைக் கடந்து விக்கும் பற்றின்மை எனும் படகாகிய துர்க்கா தேவி நீ!
விஷ்ணுவின் இருதயத்தைத் தனியிடமாகக் கொண்டு விளங்கும் ஸ்ரீதேவி நீ!
சந்திர மௌலியிடம் பிரியாதுறையும் கௌரியும் நீயே!

அம்பாள் மெய்யடியார்களே!

தென்மராட்சிப் பதியில் சுந்தர பஞ்சதள இராஜ கோபுரத்துடன் வாரிவனம் திவ்விய பதியில் பல நூறு ஆண்டுகளாகத் திருவருள் பாலித்துக் கொண்டு இருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் பரிவார மூர்த்தியான ஸ்ரீ மகா காளியம்பாளுக்கு மங்கள கரமான விரோதி வருடம் ஆனித்திங்கள் 19ம் நாள் (04.07.2009) இல் நடைபெற்ற நூதன கும்பாபிஷேகம் பின் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா, மங்களகரமான விரோதி வருடம் ஆவணி முதல் நாள் இன்று (17.08.2009) திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. காலை 8 மணிக்கு முத்துமாரி அம்பாளுக்கு சங்காபிஷேகமும், காளி அம்பாளுக்கு கலச சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. தொடர்ந்து விசேட பூஜைகள், வேத தோத்திர திருமுறை பாராயணம் ஓதுதல், மகேஸ்வரபூஜை என்பன நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து தோத்திரப் பாடல்கள் இறுவட்டு வெளியிடும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.



## மாரியம்பாள் ஸ்ரீமாகாளித்தாயின் மண்டலாபிஷேகப் பெருவிழா காண வாரீர்!



இந்து சமுத்திரத்தின் நித்திலமெனப் போற்றப்படும் ஈழமணித் திருநாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சி திருநகரத்தில் வாரிவனம் எனும் சைவத் தமிழ் பேருரில் கோயில்கொண்டு வேண்டுவார் வேண்டுவதைத் தருபவளாக விளங்கும் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியன்னையின் ஆலயத்தையும் பரிவார மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீமாகாளி அம்பாளின் ஆலயத்தை பஞ்சதள இராஜகோபுரத்தையும் சீர்விளங்க சைவ ஆகம விதிகளுக்கமைவாக சிறந்த சிற்பக் கலைஞர்கள் மூலம் அமைக்க தாயானவள் எனக்கிட்ட கட்டளை இது.

சிரமேற்கொண்டு அத்திருப்பணியை நிறைவேற்றியமை அவளருள் என்றே சொல்லவேண்டும். அதுமட்டுமன்றி ஆலய சிவாச்சாரி யார்கள், உபயகாரர்கள், தொண்டர்கள் மற்றும் ஊரவர்கள் அனை வரினதும் பூரணமான ஒத்துழைப்பே அம்பாளின் திருக்கோயிலை அழகுறு நிலையில் அமைக்க காரணமாயிருந்தது. இவற்றுக்கெல்லாம் தோன்றாத் துணையாக இருப்பவள் மாரியாத்தாளும், மாகாளித்தாயும். அம்பிகையை தூய்மையான அன்போடு வழிபாடாற் றினால் நல்ல பயன்களைப் பெறுவதோடு நினைத்ததை அடைந்து முத்தியையும் பெற்றுக்கொள்ளலாம் என்கிறார் திருமூலர்.

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவது ஒன்றும் இல்லை
அவளன்றி ஊர்புகுமாறு அறியேனே - திருமந்திரம்

அம்பிகைக்கு ஒரு வடிவத்தைக் கூறிவிடமுடியாது. அவள் பல வடிவமாகி நின்று அவரவரின் பக்குவ நிலைக் கேற்ப அருள் புரிகின்றாள். அம்பிகை அழகுருவானவள் தயையும், சாந்தமும் தாங்கிய அருள் நோக்கினள். குளிர்மை பொருந்தியவள், தீயினை ஒழிப்பவள். அடியாருள்ளத்தில் தேன்போன்று தித்திப்பவள். இத்தகு அற்புதச் சிறப்புக்களால் போற்றப்படுபவள். சாவகச்சேரி வாரி வனத்தில் ஸ்ரீ முத்துமாரியாகவும், ஸ்ரீமாகாளியாகவும் அருள்பாலிக் கின்றாள். கடந்த ஆண்டு (2008) மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்புற நிறைவேற்ற அம்பிகையின் அருள் பெருகியது. அதேபோல் 2009.07.04 இல் மாகாளி யின் மகாகும்பாபி ஷேகத்தினை நிறைவேற்றும் அருள் ஆட்சி பெருகியது. தொடர்ந்து 45 தினங்கள் சிறப்புற மண்டலாபி ஷேகப் பெருவிழா வழிபாடுகள் நடந்தேறியது. இன்றைய தினம் (17.08.2009) மண்ட லாபிஷேக பூர்த்திப் பெருவிழா நடைபெறவும், கும்பாபிஷேக மலர்வெளியீடு, தோத்திரப் பாடல் இறுவட்டு வெளியீடு போன்ற நிகழ்வுகள் இவ் ஆவணித் திங்களில் நடைபெறுகின்ற அரிய வாய்ப்பினையும் அம்பாள் நிறைவேற்றியுள்ளாள். ஓராண்டில் இத்தனை நிகழ்வுகளை நடத்தி முடிப்பதற்கு என்னையும் ஒரு பொருட்டாக மதித்து வழிநடத்தி வருகின்றாள். அவளின் ஆணைக்கு அடிபணிந்துள்ளேன். இன்னும் அம்பிகைக்கு பல திருப்பணிகளையும், அறப்பணிகளையும் நிறைவேற்றச் சித்தமாகவுள்ளேன். எல்லாம் அவள் செயல். அவளின்றி ஓர் அணுவும் அசையாது. இப்பணி சிறக்க உழைத்த அனைவரையும் மீண்டும் நெஞ்சத்தில் சுமந்து நன்றி கூறுகின்றேன்.

மாரிமைந்தன், திருப்பணியாளர், திருப்பணிவித்தகர், **வை.சிவராஜா.**

## ஆசியுரை



பல்லாண்டு காலமாக வாரிவனப்பதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் அன்னையின் பரிவார மூர்த்தியாகவிளங்கிக் கொண்டிருக்கும்மாகாளி அம்பாளுக்கும் நடைபெற்ற குடமுழுக்கு வைபவத்தினைத் தொடர்ந்து இன்று மண்டல பூர்த்தி விரோதி வருஷம் சூரியன் சிம்ம ராசியில் பிரவேசிக்கின்ற ஆவணி மாதம் முதல்திங்கள் "திரு" ஆதிரை நட்ஷத்திரம் சேர்ந்த புனித நன்னாளில் அஷ்டோத்தர கலச சங்காபிஷேகம் நிகழ இருப்பது மிகவும் சிறப்புடையதாகும்.

திருஞானசம்பந்தப் பெருமான் அவதாரம் செய்தருளிய சீர்காழிப்பதியின் பன்னிரண்டு பெயர்களில் "ஸ்ரீ காளிபுரம்" என்பதும் ஒன்றாகும். இங்கு காளி வழிபட்டுப் பேறு பெற்றதால் இப்பெயர் வந்ததாகத் தலபுராணம் கூறுகிறது. திருஞானசம்பந்தப் பெருமான் சீர்காழி காளீஸ்வரரைப் பாடிய தனது தேவாரப் பதிகத்தில் "....வெம்போர் மகிடற் செற்று நிகழ்நீலி நின் மலன் தன் இன் அடி இணைகள் பணிந்து...." எனச் சீர்காழியில் காளி வழிபாடு செய்ததைக் குறிப்பிடுகின்றார். அவ்வாறே வாரி வனப்பதியிலும் சிவபிரானும், ஸ்ரீ முத்துமாரி அம்பாளும் அன்ன மாகாளி அம்பாளும், அனைத்து அடியார்களுக்கும் இஷ்ட சித்திகள் அனைத்தையும் நல்க வேண்டியும் குறித்த திருப்பணிகளை நிறைவு செய்த திருப்பணியாளர் வை. சிவராசா குடும்பத்தினருக்கும் ஆதீன குருக்கள் சிவஸ்ரீ த. வீரபத்திரக் குருக்கள் குடும்பத்தினருக்கும் இஷ்ட சித்திகள் நல்க வேண்டியும், அன்னையைப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றோம்.

"ஸர்வ ஜனஹா தகினோ பவந்து"

க. கிருபானந்தக் குருக்கள்,
இஞ்சியாரணியம் மண்டுவில் அம்பாள் ஆலயம், மிருசுவில்.

## தாயின் அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திப்போம்



சாவகச்சேரி வாரிவனத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீமுத்துமாரித்தாயே சரணம். ஸ்ரீமுத்துமாரித் தாயின் அருட் கடாட்சம் பெற்ற ஸ்ரீமுத்துமாரி மைந்தன் திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவ ராஜா அவர்களது அனுசரணையுடன் சைவ நெறிப் பாடப்புத்தகத்திலுள்ள தரம் 6முதல் தரம் 11 வரை தோத்திரப் பாடல்கள் இறுவட்டாக வெளியிடப்படுகின்றது. சங்காபிஷேக தினமாகிய இன்று (17.08.2009) திங்கட்கிழமை இறுவட்டு வெளியிடத் திருவருள் கைகூடியுள்ளது. தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்கள் தோத்திரங்களைப் பாடிப் பயில வசதியாக இறுவட்டு பொன் ஸ்ரீவாமதேவன் குரலில் கம்பீரமாக ஒலிக்கிறது.

திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராஜாவினூடாக கருணைக் கடலாம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கடைக்கண் பார்வை எமக்கும் கிடைத்தமையை சிரமேற் பூசித்து பலமுறை வணங்கி சிரந்தாழ்த்தி ஆசியுரை கொடுப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

**தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,தென்மராட்சிக் கல்வி வலயம்.

## அருள்கொழிக்கும் அம்மா



சாவகச்சேரி வாரிவனத்தில் பஞ்சதள கோபுரத்தில் எழுந்தருளி அருள் கொழிக்கும் அன்னை எல்லா உயிர்களுக்கும் அம்மாவாக வீற்றிருந்து அருட்கடாட்சம்தருகின்றாள்.

வாரிவனம் ஸ்ரீமுத்துமாரிக்கு அருள் மழையாக; மாரி மைந்தன் வைத்திலிங்கம் சிவராசா அவர்கள் மிகப் பிரமாண்டமான மடாலயங்கள் பஞ்சதள கோபுரங்களோடு மிக அற்புதமாக ஆலயத்தை ஸ்தாபனம் செய்து மாரி அம்மனுக்கே தனிச்சிறப்பும் அழகும் மெருகூட்ட 14.07.2008 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றமை யாவரும் அறிந்த விடயமே. இவ்வாறு அருளொளிக்க ஓர் ஆண்டு பூர்த்தி யிலே தெய்வீக மயமாக வெளிப்பிரகாரத்தில் அவள் சோதரியையும் இந்தியாவில் இருந்து வரவழைத்து பிரதிஸ்டாபனம் செய்யப்பட்டு 04.06.2009 சனிக்கிழமை ஸ்ரீ மகாகாளித் தாயவளுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்று, தொடர்ந்து 45 நாள்கள் மண்டலா பிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றமை யாவரும் அறிந்தவிடயம்.

இன்று (17.08.2009) திங்கட்கிழமை மாரித் தாயவளுக்கும், காளித் தாயவளுக்கும் பாற்கலச சங்காபிஷேகம் தெய்வீககடாட்சம் இணைந் தாற்போல் நடைபெற உள்ளதை நினைத்தால் மெய்சிலிர்க்கின்றது. எண்ணினார் சிந்தை இறையை நாடுகின்றது. பக்தி பூர்வமாக வணங்கினால் அவள் பத்திரகாளி, மிகப் பிர மாண் டமீக அழகிய புன்முறுவலுடன் காட்சி தருவதால் மகாகாளி. நாம் எப்படி அழைத்தாலும் எல்லாமே அவள் சொரூபம். இனிமையாகவும், செம்மை யாகவும் அனைத்தையும் தம்பணியாக நடத்தி, மாரிமைந்தன் திருப்பணி வித்தகர் எனும் பட்டங்களையும் பெற்ற திரு.வைத்திலிங்கம் சிவராசாவிற்கும் அவரது குடும்பத் தினருக்கும் மற்றும் அன்பர்கள், தொண்டர்களுக்கும் தாயவளின் அருளாசி கிடைக்கவேண்டும். இந்நன்னாளில் பிரதம குருவாக இருந்து கிரியைகளை நடத்திய சிவஸ்ரீ த.வீரபத்திரக் குருக்கள் மற்றும் குருமார்கள், அடியவர்கள் அனைவருக்கும் மாரித்தாயினதும் அவள் சோதரியினதும் அருள் கிடைக்க மனமாரப் பிரார்த்திப்போமாக!

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

வி.சிவசரணநாதன், கிராம உத்தியோகத்தர்,J/306 (நுணாவில் கிழக்கு)

**மங்கள வாத்தியம்**

ஆர்.முருகானந்தம் (நடுவில்), கோண்டாவில்.
ஆர்.சுதா குழுவினர், (கட்டப்பிராய்).
தையல் நாயகி (நாதஸ்வரம்) கல்வியங்காடு.
புஸ்பராணி (தவில்) கல்வியங்காடு.
வட்டூர் இராமநாதன் புதல்வர்கள்

நிகழ்வுகளில் கலந்து எம்பெருமாட்டியின் திருவருளைப் பெற்றுய்விர்களாக
'எல்லோரும் இன்புற்று வாழ்க'
'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

மாரிமைந்தன் திருப்பணி வித்தகர், திருப்பணியாளர்
திரு வைத்திலிங்கம் சிவராசா ( சிவா றேடிங் கம்பனி)
ஆலய ஆதீன பிரதம குரு,
சிவஸ்ரீ தம்பையாக் குருக்கள், வீரபத்திரக் குருக்கள்

## தோத்திரப் பாடல் இறுவட்டு வெளியீடு

இடம்: சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மண்டபம்
காலம்: இன்று (17.08.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி
தலைவர்: உயர்திரு.சு.பிறேமகாந்தன்
(வலயக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி)
முதன்மைவிருந்தினர்: உயர்திரு. கலாநிதி மா.வேதநாதன்
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்லைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்: 1. திருமதிஅ.வேதநாயகம்
(வலயக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
2. திரு.வ.செல்வராசா (வலயக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி)
3. திரு.ப.விக்னேஸ்வரன் (வலயக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம்)
4. திரு.ஜி.என்.இராதாக்கிருஷ்ணன் (வலயக் கல்விப்பணிப்பாளர், தீவகம்)

பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம். பாடசாலை அதிபர் களிடம் அப்பாடசாலைக்குரிய இறுவட்டு இலவசமாக வழங்கப்படும். மாணவர்கள் தனித் தனியாக இறுவட்டுகளை ரூ.50 செலுத்தி சலுகை விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## நிகழ்வுகள்

1. இறைவணக்கம் - யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய மாணவர்கள்
2. ஆசியுரை - சிவஸ்ரீ த.வீரபத்திர சிவக்குருக்கள்
3. தலைமையுரை
4. இறுவட்டு வெளியீடு - முதன்மை விருந்தினர் திரு.மா.வேதநாதன் அவர்கள் அனுசரணையாளரும் திருப்பணியாளருமாகிய வைத்திலிங்கம் சிவராஜா அவர்களுக்கு வழங்குவார்.
5. வெளியீட்டுரை - திரு.த.ஸ்ரீஸ்கந்தராஜா (ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம், சாவகச்சேரி)
6. ஏற்புரை: பாடலாசிரியர் பொன்ஸ்ரீ வாமதேவன்
7. கௌரவிப்பு: பாடலாசிரியர் பொன்ஸ்ரீ வாமதேவன் அவர்களை முதன்மை விருந்தினர் கௌரவிப்பார்.
8. சிறப்பு விருந்தினர்கள் உரை
9. முதன்மை விருந்தினர் உரை
10. நன்றியுரை: திரு.கு.கமகலிங்கம் (ஆசிரியர், யாழ்.சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்)
11. இறைவணக்கம்

**ஸ்ரீமுத்துமாரி அம்மன் பல்பொருள் வாணிபம்**
இல.342, 344, 346,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## அருள்மிகு ஸ்ரீ மாகாளியம்பாளின் மண்டலாபிஷேகப் பெருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**அம்பாள் றேடேர்ஸ்**
கண்டி வீதி,
சாவகச்சேரி.

சகித் படமாடம்
அன் அலுமினியம் பிற்றிங்
இல.11, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே.: 077 6016276

எஸ்.கே.உணவகம்
கண்டி வீதி, சாவகச்சேரி.
எஸ்.கே.சூஸ்லாஸ்
இல.12, நியூமார்க்கட்
உட்புறம்,சாவகச்சேரி.

கோயில் அபிஷேகத் திரவியங்களைப் பெற
**விநாயகர் மருந்தகம்**
இல.9, பஸ்நிலையம்,
சாவகச்சேரி.

நியூ பரம்ஸ்
இல.01,
பஸ் நிலையம்,
சாவகச்சேரி.

நிலா புடைவை
இல.20, நியூமார்க்கட்
உட்புறம்,
சாவகச்சேரி.

லிங்கம் கபே
கண்டி வீதி,
சாவகச்சேரி.

குமார் விற்பனை நிலையம்
கண்டி வீதி,
சாவகச்சேரி.

சிவராசா சாஜீ ஸ்ரோர்ஸ்
நுணாவில் மேற்கு,
மடத்தடிச் சந்தி,
சாவகச்சேரி.

**அன்னை ரெக்ஸ்**
இல.11, நவீனசந்தை,
சாவகச்சேரி.


**கதிரவன் இரும்பகம்**
இல.22, டச்சு வீதி,
சாவகச்சேரி.

நியூ ஜெயம் சைக்கிள்வேக்ஸ் அன் உதிரிப்பாக விற்பனை நிலையம்
கண்டி வீதி, சாவகச்சேரி.

முத்துமாரி அம்மன் மரத்தளபாட நிலையம்
கண்டி வீதி,
சாவகச்சேரி.

**சபாரத்தினம் நகையகம்**
கண்டி வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் 62ஆவது சுதந்திர தினம் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து பிரதமர் மன்மோகன் சிங் உரையாற்றுவதையும், சென்னையில் கொடியேற்றிவைத்து முதல்வர் கருணாநிதி உரையாற்றுவதையும் படங்களில் காண்க.

# அனைவரதும் ஒத்துழைப்புடன் தீவிரவாதத்தை ஒடுக்குவோம்!

## சுதந்திர தின உரையில் மன்மோகன் தெரிவிப்பு

புதுடில்லி, ஓக. 17

அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவுடன் ஒற்றுமைக்கும், அமைதிக்கும் மிரட்டல் விடும் தீவிரவாதத்தை ஒடுக்குவோம் - என்று பிரதமர் மன்மோகன் சிங் சூளுரைத்தார்.

இந்தியா முழுவதும் 62ஆவது சுதந்திர தினம் நேற்றுமுன்தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. டில்லி செங்கோட்டை யில் தேசியக் கொடியை ஏற்றி, நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தீவிரவாதமும், நக்ஸலைட் வன்முறையும் உலகளவில் அமைதிக்கும், ஒற்றுமைக்கும் மிரட்டல் விடுத்துக் கொண்டிருக்கின்றன. தீவிரவாதத்தை ஒழித்துக்கட்ட உளவுத்துறை, பாதுகாப்புப் படையின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எல்லாத் தரப்பு மக்களின் ஆதரவோடு இந்தியாவில் தீவிரவாதம் வெற்றிகரமாக ஒழித்துக் கட்டப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

உலகளாவிய பொருளாதார தேக்கத்தால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ள நேரத்தில், வரட்சியால் விவசாய உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் நாட்டில் எந்த குடிமகனையும் பட்டினி கிடக்க விட மாட்டோம் என்ற உறுதி மொழியை அளிக்கிறேன். உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டுக்குகீழ் உள்ள மக்களுக்கு கிலோ ரூபா 3 விலையில் மாதம் 25 கிலோ உணவு தானியம் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

வங்கிகளுக்கு விவசாயிகள் திருப்பி செலுத்த வேண்டிய கடன் தவணைத் திகதி தள்ளி வைக்கப்பட்டுள்ளது. உணவு தானியம், பருப்பு வகைகள் மற்றும் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களின் விலை உயர்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்னொரு பசுமைப் புரட்சி உருவாக்கப்பட்டு, அடுத்த ஐந்தாண்டுகளில் வேளாண் உற்பத்தியை 4 சதவீதம் அதிகரிக்கப்படும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் பொருளாதார தேக்கம் சீரடைந்து, பொருளாதார வளர்ச்சி 9 சதவீதத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் சில பகுதிகளில் பரவியுள்ள பன்றிக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஒருங்கிணைந்து செயற்படும். இதற்காக மக்கள் பதற்றம் அடைந்து இயல்பு வாழ்க்கையை பாதிப்புக்குள்ளாக்க வேண்டிய அவசியமில்லை - என்றார்.

# இந்தியா - பாக். கூட்டறிக்கை குறித்து சுதந்திரதின உரையில் பேசாதமை ஏன்?

## மன்மோகனிடம் அத்வானி கேள்வி



புதுடில்லி, ஓக.17

இந்திய - பாகிஸ்தான் கூட்டறிக்கை பற்றி பிரதமர் மன்மோகன்சிங் சுதந்திர தின விழா உரையில் குறிப்பிடாதமை ஏன் - என்று பா.ஜ.கவின் மூத்த தலைவரும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான அத்வானி நேற்றுமுன்தினம் கேள்வி எழுப்பினார்.

சமீபத்தில் எகிப்து நாட்டில் வெளியிடப்பட்ட இந்திய - பாகிஸ்தான் கூட்டறிக்கையில், பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. பலுசிஸ்தானில் தீவிரவாதம் மூலம் பிரச்சினையை தூண்டிவிடுவது போல் பொருள் தரும் வாசகம் அதில் இடம்பெற்றிருந்தது. அத்துடன், பாகிஸ்தானுடன் நடைபெறும் அமைதிப் பேச்சுக்கும் தீவிரவாதத்துக்கும் தொடர்பில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

கூட்டறிக்கையின் இந்த இரு அம்சங்கள் குறித்து பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தன.

இந்நிலையில், இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்திய - பாகிஸ்தான் கூட்டறிக்கையில் பலுசிஸ்தான் பிரச்சினை பற்றி குறிப்பிட்டிருந்தமை பற்றி சுதந்திரதின விழா உரையில் மன்மோகன்சிங் விளக்கம் அளிப்பார் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அப்படி எந்த விளக்கத்தையும் அவர் அளிக்கவில்லை.

கூட்டறிக்கையில் அந்த வாசகம் இடம்பெற்றிருப்பதைத் தன்னால் ஆதரிக்க முடியாது என்பதை இப்போது அவர் புரிந்துகொண்டதையே அவருடைய மௌனம் காட்டுகிறது. தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைக்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும் - என்றார்.

# முதல்வர்கள் மாநாடு ஸ்டாலின் பங்கேற்பு



டில்லி, ஓக. 17

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் புதுடில்லியில் இன்று நடைபெறும் முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழக அரசின் சார்பில் துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்து கொள்கிறார். இதற்காக அவர் நேற்று மாலை பர்கூரில் பிரசாரத்தை முடித்துக் கொண்டு அப்படியே பெங்களூரிலிருந்து டில்லி புறப்பட்டுச் சென்றார்.

இம்மாநாட்டில் வரட்சி நிலை, பன்றிக்காய்ச்சலை தடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் அதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், பொருளாதார வளர்ச்சி, உள்நாட்டு பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் அனைத்து மாநில அரசுகளின் சார்பிலும் அமைச்சர்கள் கலந்துகொண்டு பல முக்கிய முடிவுகளை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கைக்கு 90 நவீன ரயில் பெட்டிகள்

## ஐ.சி.எவ். தயாரித்து வழங்க அனுமதி

சென்னை, ஓக. 17

இலங்கைக்கு 90 நவீன ரயில் பெட்டிகளைத் தயாரித்து வழங்க பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு (ஐ.சி.எவ்.) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஐ.சி.எவ். வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியேற்றி வைத்த அதன் பொது மேலாளர் எம்.எஸ்.ஜெயந்த் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

கடந்த ஆண்டு முதல் காலாண்டில் 222 ரயில் பெட்டிகளை ஐ.சி.எவ். தயாரித்தது. இந்த நிதியாண்டில் இதே கால கட்டத்தில் ஊழியர் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, 285 ரயில் பெட்டிகளைத் தயாரித்து ஐ.சி.எவ். சாதனை படைத்துள்ளது.

இலங்கை கேட்டுக் கொண்டதன்பேரில், அந்நாட்டு ரயில்வே துறைக்கு பிரத்தியேகமான 90 பெட்டிகளுடன் கூடிய 15 டீசல் மின் தொடர்களைத் தயாரித்து ஐ.சி.எவ். விரைவில் வழங்க உள்ளது.

இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகத்துக்கு (ஐ.ஆர்.சி.டி.சி.) நவீனத் தொழில்நுட்ப மற்றும் சொகுசு வசதிகளுடன் கூடிய 10 வகையான சுற்றுலா ரயில் பெட்டிகளை ஐ.சி.எவ். தயாரிக்கின்றது.

இவை தவிர பாதுகாப்புத் துறைகளுக்காக, ஒருங்கிணைந்த தகவல் தொடர்பு வசதிகளை வழங்கும் அதிநவீன ரயில் பெட்டிகளையும் ஐ.சி.எவ். விரைவில் தயாரித்து வழங்க உள்ளது.

ரயில் பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் ரயில் பெட்டிகளை ஐ.சி.எவ். தயாரித்து வருகிறது - என்றார்.

# நடிப்பில் கவனம் செலுத்த நடிகை சோனியா முடிவு



சென்னை, ஓக.17

விவாகரத்து எங்கள் தனிப்பட்ட விடயம். இனிமேல் நடிப்பில் அதிக கவனம் செலுத்துவேன் - என்றார் நடிகை சோனியா அகர்வால்.

காதலித்து திருமணம் செய்துகொண்ட செல்வராகவனும் சோனியா அகர்வாலும் விவாகரத்துக் கோரி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இதையடுத்து சோனியா, சினிமாவில் கவனம் செலுத்த இருக்கிறார் எனக் கூறினார்.

இதுகுறித்து அவரிடம் கேட்டபோது, விவாகரத்து எங்கள் தனிப்பட்ட விடயம். இதனால் எனக்கு வருத்தம் எதுவும் இல்லை. இப்போது அது பற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. இனி தொடர்ந்து படங்களில் நடிக்க கவனம் செலுத்துவேன் - என்றார்.

# இலங்கைக்கு இராணுவ உதவியளித்து இந்தியாவைத் துண்டாட சீனா திட்டம்

## விஸ்வ இந்து பரிஷத் தலைவர் குற்றச்சாட்டு

இராமேஸ்வரம், ஓக. 17

இலங்கை, பாகிஸ்தானுக்கு இராணுவ உதவிகளைச் செய்து இந்தியாவைத் துண்டாட சீனா திட்டமிட்டுள்ளது என்று விஸ்வ ஹிந்து பரிஷத் அகில உலக செயல் தலைவர் எஸ். வேதாந்தம் எச்சரித்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இதுகுறித்து மேலும் அவர் கூறியவை வருமாறு -

வலிமையான, ஜனநாயக நாடாக மத - இன பாகுபாடின்றி விளங்கிவரும் இந்தியாவை சீனாவுக்குப் பிடிக்கவில்லை. இந்தியாவைத் துண்டாட வேண்டும் என சீன வெளியுறவு நிபுணர் கூறிய கருத்து, சீனாவின் அடிப்படைக் கருத்தாகும்.

இலங்கையில் சீனா இராணுவத் தளம் அமைத்து வருகிறது. பாகிஸ்தான், பங்களாதேஷ், மியான்மர் ஆகிய நாடுகளுக்கு ஆயுத உதவி செய்கிறது.

அசாமில் உல்பா என்ற பிரிவினைவாத அமைப்புக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் தனது நாட்டில் பயிற்சி அளித்து ஆயுத உதவி செய்து வருகிறது.

அமெரிக்கா போன்று தன்னை ஒரு வல்லரசு நாடாக தெற்காசியாவில் நிலை நிறுத்தி, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி இந்தியாவைத் துண்டாட சீனா திட்டமிட்டுள்ளது.

பஞ்சசீலக் கொள்கையை புறக்கணித்து 1962 இல் இந்தியாவின் பெரும் பகுதியை சீனா ஆக்கிரமித்தது. ஆனால் மத்திய அரசு இப்போது சீனாவுடன் நட்புறவு கொள்ள முயல்கிறது. சீனா எப்போதும் இந்தியாவுக்குச் சாதகமாக இருந்தது இல்லை - என்றார்.

# தமிழகக் காங். அலுவலகத்தில் பாதி எரிந்த சோனியா படத்தின் மேல் பிரபாவின் படம்!

சென்னை, ஓக. 17

கடலூர் மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் சோனியா காந்தியின் உருவப்படம் பாதி எரிந்த நிலையில், அதன்மேல் விடுதலைப் புலிகளின் தேசியக்கொடி மற்றும் தலைவர் பிரபாகரனின் படம் என்பன காணப்பட்டமையால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

கடலூர் கலெக்டர் அலுவலகம் செல்லும் வீதியில் மாவட்ட காங்கிரஸ் அலுவலகம் உள்ளது. சுதந்தின விழா கொண்டாடுவதற்காக 14 ஆம் திகதி கொடி மேடை வெள்ளையடித்து காங்கிரஸ் கொடி, தோரணம் கட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

பின்னர் அலுவலக நிர்வாகி பக்தவத்சலம் இரவு அலுவலகத்தை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றார். காலை 7 மணிக்கு பக்தவத்சலம் காங்கிரஸ் அலுவலகத்தைத் திறந்தபோது காங்கிரஸ் கொடி எரிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் கொடி மேடை அருகே, சோனியாவின் உருவப்படம் பாதி எரிந்த நிலையில் கிடந்தது. அதன் மீது விடுதலைப் புலிகளின் கொடி மற்றும் பிரபாகரன் படம் இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர் முன்னாள் எம்.பி., பி.ஆர்.எஸ்.வெங்கடேசன், மாவட்டத் தலைவர் நெடுஞ் செழியன் உள்ளிட்டவர்களுக்கு தகவல் தெரிவித்தார்.

சுதந்திர தின விழா நடைபெற்றதால், தாமதமாகப் பொலிஸாருக்கு முறைப்பாடு தெரிவித்தனர். அதன்பேரில் பொலிஸார் காலை 11 மணிக்கு மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் கொடி எரிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு விசாரித்தனர்.

# திண்டிவனம் அருகே ஆயிரத்து 300 ஆண்டுகள் பழைமையான மூத்ததேவி சிற்பம் கண்டுபிடிப்பு

திண்டிவனம் அருகே 1,300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மூத்ததேவி சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் கோனேரிகுப்பம் தனியார் கலை அறிவியல் கல்லூரி வரலாற்று துறை விரிவுரையாளர் ரமேஷ் தலைமையில் மாணவர்கள், ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது மூத்ததேவி சிற்பத்தை கண்டுபிடித்துள்ளனர்.

இது தொடர்பாக ரமேஷ் கூறியவை வருமாறு -

''அமுதம் பெற கடலை கடைந்தபோது திருமகளுக்கு முன்பு தோன்றியவள் ஆதலால் மூத்த தேவி என அழைக்கப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. கி.பி. 8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 11ஆம் நூற்றாண்டு வரை வழிபாடுகளில் மூத்ததேவி இடம் பெற்றுள்ளாள். சிவாலயங்களின் வடமேற்கு மூலையில் மூத்ததேவி சிற்பம் காணப்படும். நீர் நிலைகளை காக்கும் கடவுளாக இவள் கருதப்படுகிறாள்.



சாரம் கிராமம் தேசிய நெடுஞ்சாலையில் வடக்கு நோக்கிய திசையில் மூத்த தேவியின் சிற்பம், பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. ஆசனத்தில் அமர்ந்தவாறு தனது இருகால்களையும் பக்கவாட்டில் அகற்றி தொங்கவிட்ட நிலையில் உள்ளது. தோள்பட்டை வரை நீண்டு தொங்கும் தொளைகாதும், தட்டை வயிறும், [illegible] படுகிறது. இ[illegible]மங்களின்படி படைக்கப்பட்டுள்ளன - என்றார்.

# காங்கிரஸில் இணைவாரா விஜயசாந்தி?

ஐதராபாத், ஓக.17

ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியை நடிகை விஜயசாந்தி மீண்டும் சந்தித்துப் பேசியிருப்பதால், அவர் காங்கிரஸில் இணைவாரா என்ற சந்தேகம் வலுவடைந்து வருகிறது.

ஆந்திராவில் 'தல்லி தெலுங்கானா' என்ற கட்சியை நடத்தி வந்த நடிகை விஜயசாந்தி, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் தனது கட்சியை தெலுங்கானா ராஷ்டிரீய சமிதி கட்சியுடன் இணைத்துக்கொண்டார்.

பின்னர் அவர் அக்கட்சி சார்பில் மேடக் தொகுதியில் போட்டியிட்டு எம்.பி. ஆனார்.

தற்போது தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சி, தலைவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, அவர் அக்கட்சியில் இருந்து விலகி, காங்கிரஸ் கட்சியில் சேருவார் என்று பேச்சு அடிபட்டு வருகிறது.

அவர் ஏற்கனவே ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியை சந்தித்துப் பேசி இருக்கிறார். நேற்றுமுன்தினம் மீண்டும் அவரை ஐதராபாத்தில் சந்தித்துப் பேசினார்.

இதனால் நடிகை விஜயசாந்தி காங்கிரஸில் இணைவாரா என்று அரசியல் வட்டாரத்தில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களால் ஆப்கான் தேர்தல்களை தடுத்துவிட முடியாது

## ஜனாதிபதி ஹமித் கர்சாய் திட்டவட்டம்

காபூல், ஓக. 17

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலிலுள்ள நேட்டோ தலைமையகத்துக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு ஜனாதிபதி ஹமித் கர்சாய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இத்தகைய தாக்குதல்கள் மூலமாக ஜனாதிபதித் தேர்தலையோ, மாகாணசபைத் தேர்தலையோ தடுத்து விட இயலாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்குண்டுத் தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். 90 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் ஆப்கான் நாடாளுமன்ற உறுப்பினர் ஹாவா நூரிஸ்தானியும் அடங்குவார். பாதுகாப்பு வலயத்துக்குள் இக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத் தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாத இயக்கம் உரிமை கோரியுள்ளது.

இப் பகுதியிலேயே ஜனாதிபதி மாளிகை, அநேக தூதரகங்கள் ஆகியவை அமைந்துள்ளன. இக் குண்டுவெடிப்பில் தூதரகக் கட்டடமொன்று சேதமடைந்துள்ளது. சனிக்கிழமை உள்ளூர் நேரப்படி மாலை 4 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குண்டுவெடிப்பை அடுத்து, அப் பகுதியை கடும் புகை மண்டலம் மறைத்தது.

தற்கொலைக் குண்டுதாரி தனது காரில் அநேக பொலிஸ் சாவடிகளைச் சாதுரியமாகக் கடந்து சென்று, நேட்டோ படைகளின் தலைமையக நுழைவாயிலுக்கருகில் கார்க் குண்டை வெடிக்க வைத்துள்ளார். நுழைவாயிலிலிருந்து 30 மீற்றர் தொலைவில் பயங்கர சத்தத்துடன் குண்டுவெடித்துச் சிதறியுள்ளது.

நேட்டோ தலைமையிலான சர்வதேச உதவிப் பாதுகாப்புப் படையின் தலைமையகத்தைச் சேர்ந்த சிப்பாய்களும் மரணித்தவர்களில் அடங்குவர். குண்டுவெடிப்பை அடுத்து, நேட்டோ படையால் அப்பகுதி 'சீல்' வைக்கப்பட்டது. பொலிஸ் வாகனங்களும், அம்புலன்ஸ் வாகனங்களும் அவ்விடத்துக்கு விரைந்தன. குண்டுத் தாக்குதலில் பெருந்தொகையான சிப்பாய்கள் காயமடைந்துள்ளார்கள்.

இக் குண்டுத் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்து ஜனாதிபதி ஹமீத் கர்சாய் அறிக்கையொன்றை விடுத்துள்ளார். ''இந்தத் தேர்தல் காலத்தில் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்த, ஆப்கானின் எதிரிகள் முனைந்துள்ளார்கள். இவர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டு விடும்'' என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இத் தாக்குதலுக்கு தலிபான் இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. எனினும், இதனை நிருபர்கள் நம்பவில்லை. ஹக்கனி அமைப்பின் தாக்குதலாக இருக்கலாம். தீவிரவாதி ஜலாலுதீன் ஹக்கனி கொல்லப்பட்ட பின்னர் அவரது பெயரில் ஆரம்பிக் கப்பட்டுள்ள ஹக்கனி அமைப்பே இத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஜலால்தீன் ஹக்கனி 2008 முதல் தலைநகரான காபூலில் இரு பெரும் தாக்குதல்களை நடத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் முன்னாள் எம்.பிக்கு மரணதண்டனை நிறைவேற்றம்

பீஜிங், ஓக. 17

சீனாவில் பள்ளிச் சிறுமிகள் 24 பேரை பாலியல் பலாத்காரம் செய்த குற்றத்திற்காக முன்னாள் எம்.பிக்கு வியாழக்கிழமை மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஹெனான் மாகாண எம்.பியாக இருந்தவர் வூ டியாங்ஸி (வயது 63). இவர் 2005 - 2007 ஆம் ஆண்டுகளில் ஆள்கடத்தும் கும்பல் மூலமாக 24 பள்ளிச் சிறுமிகளை ஏமாற்றி அழைத்துவந்து பாலியல் பலாத்காரம் செய்துள்ளார் என இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இதுமட்டுமல்லாது நில மோசடி, மிரட்டல் விடுத்தல், பொது நிதியைச் சுரண்டல் ஆகிய குற்றச்சாட்டுகளிலும் இவர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

வழக்கை விசாரணை செய்த நன்யாங் நீதிமன்றம் 2007 டிசம்பர் 9 ஆம் திகதி இவருக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. நன்யாங் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை எதிர்த்து இவர் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். உச்ச நீதிமன்றம் இதனை உறுதி செய்தது.

இதன்படி வியாழக்கிழமை டியாங்ஸிக்கான மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

## பலஸ்தீன மசூதிக்குள் துப்பாக்கிச் சமர்: 13 பேர் உயிரிழப்பு; 85 பேர் படுகாயம்!

காஸா, ஓக. 17

பலஸ்தீன மசூதி ஒன்றுக்குள் தீவிரவாதிகளுக்கும், பொலிஸாருக்குமிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 13 பேர் உயிரிழந்தனர்.

பலஸ்தீன அரசுக்கும், அல்-குவைதா தீவிரவாத இயக்கத்தின் ஆதரவு பெற்ற ஹமாஸ் தீவிரவாதிகளுக்குமிடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது.

இந் நிலையில், காஸா நகரில் ராபா என்ற இடத்திலுள்ள ஒரு மசூதிக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட ஹமாஸ் தீவிரவாதிகள் பதுங்கி உள்ளார்கள் என்ற தகவல் பொலிஸாருக்குக் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து தீவிரவாதிகளை பிடிக்க அந்த மசூதியை பொலிஸார் முற்றுகையிட்டனர். அப்போது ஏற்பட்ட மோதலில் ஒரு தீவிரவாதி உட்பட 13 பேர் பலியாயினர். 85 பேர் படுகாயம் அடைந்தனர்.

## தாய்வானில் கடும் சூறாவளிக்கு 500 இற்கும் அதிகமானோர் பலி!

தாய்வானில் கடும் சூறாவளிக்கு 500 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர் என ஜனாதிபதி மாயிங் ஜியோ தெரிவித்துள்ளார்.

தாய்வானில் அண்மையில் வீசிய கடும் சூறாவளி, அதனைத் தொடர்ந்து பெய்த கன மழை, பெருக்கெடுத்த வெள்ளம் ஆகியவற்றால் பாரிய அனர்த்தங்கள் விளைந்துள்ளன.

இந்த மழையாலும், வெள்ளத்தாலும் தெற்கு தாய்வான் மிகவும் பாதிக்கப்பட்டது. இங்குள்ள பல கிராமங்கள் மலைப் பகுதியால் சூழப்பட்டுள்ளவை. அதனால் நிலச்சரிவு ஏற்பட்டன. இவற்றில் ஏராளமானோர் சிக்கி பலியாகியுள்ளனர்.

இந்த சூறாவளி, மழை, வெள்ளம், நிலச்சரிவு ஆகியவற்றால் 500 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என தாய்வான் ஜனாதிபதி மாயிங் - ஜியோ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் சரிவர மேற்கொள்ளப்படவில்லை என தாய்வான் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## அமெரிக்க கைதி ஜோன் மியான்மரில் விடுதலை

மியான்மரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஜனநாயக ஆதரவுக் கட்சித் தலைவி ஆங் சான் சூகியை சந்தித்தமைக்காக கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அமெரிக்கரான ஜோன் யெட்டாவா விடுதலை செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டார்.

மியான்மர் விஜயத்தை மேற்கொண்டு, யங்கோனை வந்தடைந்த அமெரிக்க செனட்டர் ஜிம்வெப், சனிக்கிழமை யெட்டாவா விவகாரம் தொடர்பாக இராணுவ ஆட்சியாளர் தான் ஸ்வேயுடன் பேச்சுகள் நடத்தினார்.

மியான்மர் இராணுவ ஆட்சித் தலைவர் தான் ஸ்வேயை சந்தித்த முதல் அமெரிக்கத் தலைவர் ஜிம் வெப்தான். இந்தத் தகவலை மியான்மர் அரச அதிகாரி தெரிவித்தார். இந்தச் சந்திப்பு மியான்மர் தலைநகர் நேய்ப்யிடாவில் நடந்தது.

இச்சந்திப்பை அடுத்து, ஏழு வருட காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட யட்டாவா விடுதலை செய்யப்பட்டார்.

# மரண அறிவித்தல்கள்

### கனகசபை நல்லையா



புத்தூர் கிழக்கு, காளியானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நல்லையா நேற்று(16.08.2009) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வரும் நவமணியின் அன்புக் கணவரும் துரைராசா (லண்டன்), நவரத்தினம்(லண்டன்), நற்குணராசா (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), சர்வானந்தம்(கனடா), செல்வராணி (கொக்குவில்), பரமானந்தராசா, சண்முகராசா(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரமலர், லீலாவதி, பூலோகராணி, பவளராணி, செந்தில்குமாரன், தவச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அந்திரானை இந்து மயா னத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளியானை, புத்தூர் கிழக்கு. (87963)

தகவல்: ந.நற்குணராசா (மகன்).

### ஆசைப்பிள்ளை சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தித் திணைக்களம்)



யாமாளை, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை சிவலிங்கம் நேற்று (16.08.2009) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் பிறேமகுமார், (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தித் திணைக்களம்,யாழ்ப்பாணம்), சாந்திகுமார் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், கிராம அபிவிருத்தித் திணைக்களம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு த தையும் துஸ்யந்தி (ஆசிரியை, யா/ மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம்), தாரணி (செயன்முறை வழிகாட்டுநர், இரசாயனவியல்துறை,யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனும் சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் பங்கயற்செல்வி, தம்பித்துரை, நவமணி, வேதநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று(17.08.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி. (87964)

தகவல்: திருமதி சி.பாக்கியம் (மனைவி).

# மரண அறிவித்தல்

## சின்னப்பொடியன் ஆச்சரியம்

(முகாமையாளர் - விஜிதா கொன்ஸ்ரக்சன்ஸ்)



சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் ஆச்சரியம் நேற்று (16.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன் - நன்னி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அருமை மருமகனும் அன்னலெட்சுமியின் பாசமிகு கணவரும் குகவேணி, விஜிதா (இறுதியாண்டு மாணவி - 2007, தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பேபி, சரோஜா, பார்வதி, பூரணம் மற்றும் உருக்குமணி, சத்தியபாமா, வானகயான் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான வடிவேலு, வள்ளியம்மை, கனகம்மா, சிவபாக்கியம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சின்னத்துரை, மார்க்கண்டு மற்றும் நடேசு ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் மாணிக்கம், ராசதுரை ஆகியோரின் சகலனும் சுபாஜினி, பிரபாஜினி, நஞ்சனி (கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), சுபரூபன் (கலைப்பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்), பிரதீபன் ஆகியோரின் பெரியதந்தையும் சுவேஸ்வரன், துலகேஸ்வரி ஆகியோரின் சிறியதந்தையாரும் யோகசாளன், மதுசன் ஆகியோரின் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திரு வடிநிலை இந்து மயானத்தக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.
தொ.பே.: 060 200 8626 (87958)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சுப்பையா வைத்திலிங்கம்



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா வைத்திலிங்கம் 13.08.2009 அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் கதிர்காமத்தம்பி- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கதிர்காமநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தங்கச்சியம்மா மற்றும் இராசம்மா, சீனியம்மா, நாகம்மா, பத்மாதேவி, பொன்னம்பலம், தர்மலிங்கம், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஏரம்பமூர்த்தி, சண்முகராஜா (சிவசக்தி, வவுனியா), காலஞ்சென்ற சிவானந்தன் (கோபுரம் அரிசி ஆலை, வவுனியா) மற்றும் கருணைத்தவசோதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் செல்வமலர், ஜெயக்குமரன் (நோர்வே), ஜெயகலா (கனடா), ஸ்ரீ கலைவாணி (திருகோணமலை), தனகேசவன் (லண்டன்), பிரசாந்தி (ஆசிரியை, யாழ்ற்றன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமாரன் (கணேசன் சென்ரர்), நந்தினி (நோர்வே), அமரர் யோகதாஸ் (கனடா) மற்றும் கணேசகுமார் (இலங்கை துறைமுக அதிகாரசபை, திருகோணமலை), பிரதீபா (லண்டன்), சுரபாஸ்கரன் (ஆசிரியர்- வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனும் சிந்துஜா, சிவகாசிக்கா, யதுஷன், ஜனகன், ஜகதுக்ஷா, தீர்ப்தன், சாருகேசி, சூரங்கள் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கே.கே.எஸ் வீதி, இணுவில். (87562)

தகவல்: மருமகன்- து.சிவகுமாரன் (கணேசன் சென்ரர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுமக்கள்- இராணுவ நட்புறவுத்திட்டத்தின் ஓர் அங்கமான 52 வது படைப்பிரிவின் வழிகாட்டலுடன் 524 பிரிகேட் அனுசரணையுடன் 3ஆவது கெமுனுபடையணி பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்திய இளைஞர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி முகாமின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

52ஆவது படையணி கட்டளை அதிகாரி பிரிகேடியர் எஸ்.டி.ரி.லியனகேக்கு விளையாட்டு வீரர்கள் அறிமுகம் செய்யப்படுவதையும், பயிற்சியின் போது விளையாட்டு அதிகாரி பா.முகுந்தன் வீரர்களை நெறிப்படுத்துவதையும்,வீரர்கள் பயிற்சியில் ஈடுபடுவதையும் மேல் வரிசையிலும் -

பருத்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் வீரர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும், வடமராட்சி 524 படையணி தளபதி ஜேனரல் டி.எம்.பி. கட்டுகம்பொல வீரர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் 52 ஆவது படையணி கட்டளை அதிகாரி பிரிகேடியர் எஸ்.டி.ரி.லியனகே விளையாட்டு பயிற்சி ஆசிரியர் பா.முகுந்தனுக்கு பரிசுப் பொருள் வழங்குவதையும் கீழ்வரிசையிலும் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

# வவுனியா அகதி முகாம்களில் வெள்ளம்; மரணப் பொறியாக மாறும் பெரும் அபாயம்!

## இந்தியாவும் சர்வதேசமும் சேர்ந்து முகாம்களை இடம்மாற்றக் கோரிக்கை

சென்னை, ஒகஸ்ட் 17

**வவுனியாவில் கடந்த சில நாள்களாக ஏற்பட்டுள்ள கடும் மழை வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்கள் மரணப் பொறியாக மாறும் பாரிய அபாயம் ஏற்பட்டுள்ளது என பொது விடுதலைக்கான மக்கள் சங்கம் என்ற இந்திய அமைப்பு எச்சரித்துள்ளது.**

**சர்வதேச சமூகமும் இந்தியாவும் அவசரகால அளவில் செயற்பட்டு முகாம்களைப் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றவேண்டும் என அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.முகாம்களின் நிர்வாகத்தில் இந்தியாவையும் சர்வதேச சமூகத்தையும் உடனடியாகத் தலையிடுமாறு கோரியுள்ளது அந்த அமைப்பு.**

இது குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வவுனியாவில் இலங்கைத் தமிழர்களின் முகாம்களில் கடும் மழை வெள்ளம் ஏற்பட்டுள்ளமை குறித்து நாங்கள் கவலை அடைந்துள்ளோம்.

முகாம்களில் உள்ள 3 லட்சம் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கான அவசர நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இந்த முகாம்கள் மரணப் பொறிகளாக மாறும் என நாம் அச்சம் கொண்டுள்ளோம்.

பாதுகாப்புப் படையினரின் அனுமதியின்றி எவரும் வெளியே செல்லமுடியாத விதத்தில் இந்த முகாம்கள் முள்கம்பி வேலிகளால் அடைக்கப்பட்டுள்ளன.

தாழ்நிலப் பகுதியில் இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளமையால் வெள்ளம் தேங்கக்கூடிய அபாயம் அதிகமாக உள்ளது.

மலசலகூட வசதிகள் போதியளவாகக் காணப்படாததுடன், அநேகமானவை தற்காலிகமாக மண்ணைக்கிளறி அமைக்கப்பட்டவையாக உள்ளன. இந்த மலசல கூடங்கள் நிரம்பியுள்ளமையால் கழிவுகள் நீருடன் கலக்கின்றன.மலசலகூடக் கழிவுகளுடன் மழை வெள்ளமும் சேர்ந்துள்ளது.

சில முகாம்களுக்கான உணவு விநியோகம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர்கள் உலர் உணவு மற்றும் தங்களுடைய சொந்த சமையலிலேயே தங்கியிருந்தனர்.

**முகாம்களில் இடுப்பளவு வெள்ளம்**

மழை காரணமாக விறகுகள் நனைந்துள்ளமையால் தற்போது பல குடும்பங்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட பகுதியில் மணலின் தன்மை காரணமாக அப்பகுதி சேறும் சகதியு மாக - வாழ முடியாத பகுதியாக - மாறியுள்ளது.

சில பகுதிகளில் இடுப்பளவுக்கு வெள்ளம் நிற்பதாகவும் முகாம்களில் உள்ளவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இது அமைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் சுகாதாரப் பாதிப்புகள் ஏற்படும் சாத்தியக்கூறுகளும் உருவாகியுள்ளன.

மோசமான வீதிகள் காரணமாக வாகனங்களைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

சிறுவர்களினதும் முதியவர்களினதும் நிலைமை மிகவும் பரிதாபகரமாகவுள்ளது.

சர்வதேச சமூகம் உடனடியாகத் தலையிட்டு அவசரகால நிலைமையில் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் முகாமில் காணப்படும் நிலை மற்றும் வெள்ளம் காரணமாக யுத்தத்தில் இறந்ததைப் போன்று வெள்ளத்திலும் பலர் இறக்க நேரலாம்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்பு உலக நாடுகளுக்கு குறிப்பாக இந்திய அரசுக்கு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-சி)

## தரம் 5 மாணவர்களுக்கு வியாழனன்று லயன்ஸ் ஏற்பாட்டில் முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ். மாவட்டத்தில் சகல பாடசாலைகள் மற்றும் முகாம்களில் உள்ள தரம் 5 மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சையை எதிர் வரும் வியாழக்கிழமை சர்வதேச லயன்ஸ் கழகம் நடத்தவிருக்கிறது.

கொழும்பு எக்ஸ்பிறஸின் அதிவிசேட முன்னோடிப் பரீட்சையாக நடத்தப்படும் இப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கும் துவிச்சக்கர வண்டி வழங்கப்படவிருக்கிறது. 25 மாணவர்களுக்கு விருதுகளும், 100 புள்ளிகளுக்கு மேல் பெறும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.பாடசாலை அதிபர்கள் வினாத்தாள்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பரீட்சை முடிவடைந்ததும் அன்றே மீள ஒப் படைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

## நீர்வேலி விபத்தில் காயமடைந்த உடன்பிறப்புக்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் சனியன்று இரவு மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 17

நீர்வேலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - மினி பஸ் விபத்தில் காயமடைந்து யாழ்.ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த உடன்பிறந்த சகோதரியும் சகோதரனும் நேற்றுமுன்தினம் இரவு மரணமானார்கள்.

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த ஆர்.செல்வமூர்த்தி (வயது 30), அவரது சகோதரியான என்.சிவபுனிதம் (வயது 47) ஆகியோரே மரணமானவர்கள் ஆவர்.

இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை மினிபஸ் அவர்களை மோதியது என்றும் தலையில் பலத்த காயமடைந்த அவர்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் செல்வமூர்த்தி நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஒரு மணிக்கும் அவரது சகோதரி நேற்று அதிகாலை 3 மணிக்கும் மரணமாகினர். (1-78)

## தென்மராட்சிப் படையணியின் ஏற்பாட்டில் இரு தினங்கள் நடந்த மென்பந்தாட்டத்தில் வென்றவர்களுக்கு கேடயங்கள், உபகரணங்கள்.

யாழ்ப்பாணம், ஓக. 17


தென்மராட்சி 523 ஆவது படையணியின் ஏற்பாட்டில் கடந்த இரு தினங்களாக விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் மென்பந்து சுற்றுப்போட்டி மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தென்மராட்சி கட்டளை அதிகாரி பிரிகேடியர் எஸ்.ரி.டி.லியனகே, தென்மராட்சியின் 523 ஆவது பிரிக்கேட் அதிகாரி லெப் கேணல் ஏ.எம்.எல்.சொய்சா, 12 ஆவது விஜயபாகு ரெஜிமன்ட் கட்டளை அதிகாரி மேஜர் டி.எல்.எம்.ஜே. குமார ஆகியோர் உட்பட மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம், சைவப் புலவர் சிவஸ்ரீ.கு.சுமுகலிங்கம், ஆங்கில ஆசிரியர் ந.சபாதரன் மற்றும் பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் படைஅதிகாரிகளால் நன்றி தெரிவிக்கப்பட்டு கிரிக்கெட் துடுப்பாட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்ற மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம், இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் ஆகியவற்றிற்கான கேடயங்களையும், விளையாட்டு உபகரணங்களையும் 52 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் எஸ்.ரி.டி. லியனகே வழங்கி போட்டியாளர்களை உற்சாகப்படுத்தினார்.(1-131)


## மரண அறிவித்தல்

### அருட்பணி பிலிப்பையா யேசுநேசன் (அ.ம.தி)



யாழ்.அமல மரித்தியாகிகள் குழுமத்தைச் சேர்ந்த அருட்பணி பிலிப்பையா யேசுநேசன் (அ.ம.தி) 13.08.2009 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்புத்துறை புனித சூசையப்பர் சிற்றாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக தற்போது வைக்கப்பட்டுள்ளது. இன்று (17.08.2009) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இறுதி இரங்கல் ஆராதனைக்காக பூதவுடல் யாழ்.புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பி.ப. 4 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை அருட் தந்தையர்கள், அருட் செல்விகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பகம்,
657/1. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

(87966)

தகவல்: யாழ்.மாகாண முதல்வர்
அமல மரித்தியாகிகள் குழுமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பதுபோல் வன்னி முகாம்களில் தமிழர்கள் மழையால் பேரவலம்

## அசோசியேட்டற் பிரஸ் செய்திச் சேவை தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17

வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகள் கடந்த மூன்று நாள்கள் தொடர்ந்து பெய்த அடை மழை காரணமாக பேரவலங்களை எதிர் நோக்கியுள்ளனர் என அசோசியேட்டட் பிரஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல ஏற்கனவே முகாம்களில் அடைக்கப்பட்டு சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் தமிழ் மக்களுக்கு இந்த அடை மழை இன்னமும் பல கஷ்டங்களையும் பாரிய நெருக்கடிகளையும் ஏற்படுத்தி உள்ளது என்று அச் செய்தி சேவை குறிப்பிட்டுள்ளது.

தொடர் அடைமழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு ஆகியவற் றின் காரணமாக முகாம்களில் ஏற்பட்டிருந்த பாதகமான சூழ்நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாக அரசு தற்போது அறிவித்துள்ளது.

ஆனால் அரசின் அறிவிப்பில் உள்ள உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருப்பதாக செய்திச் சேவை சுட்டிக்காட்டுகின்றது. அடைமழையைத் தொடர்ந்து முகாம்களில் ஏற்பட்டிருக்கும் அவல நிலை குறித்து அசோசியேட்டற் செய்திச் சேவை மேலும் விவரித்திருப்பவை வருமாறு -

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்த சுமார் 3 லட்சம் தமிழ் மக்கள் வன்னி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்கின்றனர். கடந்த மூன்று நாள்கள் தொடர்ந்து பெய்த அடை மழையால் அவர்கள் இன்னமும் பல்வேறு கஷ்டங்களையும் பாரிய நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது.

முகாம்களில் தற்காலிகக் கூடாரங்களில் இவர்கள் வாழ்கின்றனர். அடை மழை இவர்களின் தற்காலிகக் கூடாரங்களை ஆக்கிரமித்து விட்டது. அடைமழையால் ஏற்பட்டிருக்கும் வெள்ளப்பெருக்கு தற்காலிக கூடாரங்களை தொடர்ந்தும் சேதப்படுத்தி நாசங்களை ஏற்படுத்தி விடுமா என்று தொடர்ந்தும் அஞ்சப்படுகிறது. தமிழ்மக்கள் அடைமழைக்கும் வெள்ளப் பெருக்குக்கும் தொடர்ந்தும் பலிக் கடா ஆக வேண்டிய நிலைமை முகாம்களில் தொடருமா என்றும் பயப்பட வேண்டியுள்ளது.

மனிக் பாம் முகாமில் வைக்கப்பட்டிருந்த அகதிகளில் நூற்றுக்கணக் கானோர் அடை மழை மற்றும் வெள்ளப் பெருக்கு ஆகியவற்றின் அபாயத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக அரச அதிகாரிகளால் வேறு இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கிறார்கள்.

வவுனியா அரச அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் இன் கருத்துப்படி 200 இற்கும் அதிக மான அகதிகள் பாதுகாப்புக் கருதி முகாம் களுக்குள்ளே காணப்படும் மேட்டு நிலப் பகுதிகளில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என சார்ள்ஸ் கூறுகின்றார். ஆனால் முகாம்களில் நிலைமை உண்மையில் கட்டுப்பாட்டுக்குள் வந்தவிட்டதா? இல்லையா என்று உறுதிப்படுத்த முடியாத நிலையிலேயே வெளியாட்கள் இருக்கின்றனர். ஏனெனில் வெளியாட்கள் முகாம்களுக்கு செல்ல முடியாதென அரசு கண் டிப்பான தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆனால் மழை தொடர்ந்து பெய்யுமிடத்து தற்காலிக கூடாரங்கள் தாக்குப்பிடிக்க மாட்டாது என்று அங்கு கடமையாற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்களும் மனிதாபிமான தொண்டர்களும் கவலை தெரிவிக்கின்றனர். மனிதாபிமான அமைப்புகளும் இராஜ தந்திரிகளும் பாரதூரமான சுகாதாரக்கேடுகளும், தொற்றுநோய் அபாயங்களும் அங்கு மழையின் தாக்கம் மற்றும் வெள்ளப் பெருக்கால் ஏற்படக்கூடும் என் அஞ்சுகின்றனர் - என்று அசோசியேட்டட் பிரஸ் செய்திச் சேவை தெரிவித்தது. (அ-சி)

## நாளை முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடம் விடுத்துள்ளார்.

ஆலய உற்சவ ஏற்பாடுகளில் ஏற்பட்டுள்ள தடைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் முடிவின் பிரகாரம் அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் மற்றும் பொலிஸார், மாநகரசபை அதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர். (அ-1)

## அடை மழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில தினங்களாக வவுனியாவில் தொடர்ச்சியாக மழை பெய்துவருவதால் அங்குள்ள அகதிமுகாம்களுக்குள் வெள்ளம் புகுந்து அகதிகள் பேரவலத்தை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் இப்போதே மழை பெய்யத் தொடங்கியுள்ளது. இதனால் அதிகம் பாதிக்கப்படப்போகிறவர்கள் வவுனியா அகதி முகாம்களில் வாடுகின்ற வன்னி மக்கள்தான்.

இந்த மக்களிடையே பயங்கரமான வியாதிகள் பரவுவதற்கு வாய்ப்புகள் உள்ளதோடு இந்த நாட்டின் பெயரும் கெட்டுப்போகும்.

இந்த வருடம் டிசெம்பர் மாதத்திற்குள் அகதிகளில் 80 வீதமானவர்கள் குடியமர்த்தப்படுவர் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐரோப்பிய ஒன்றியத்திடம் வாக்குறுதி அளித்தார். ஆனால், அதற்கான முன்னேற்பாடுகள் எவையும் செய்யப்படவில்லை. சிறிய எண்ணிக்கையிலான மக்களே குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

### ஒட்டு மொத்த அகதிகளையும் கொடுமைப்படுத்தக் கூடாது

இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரை மழைக்காலமாகும். இந்தக் காலத்திற்குள் அகதிகளில் ஒருவரையேனும் மீளக் குடியமர்த்த முடியாது.

அகதி முகாம்களில் சுமார் இரண்டரை லட்சம் மக்கள் உள்ளனர். அவர்களுள் 25 ஆயிரம் புலிகள் உள்ளனர் என்று அரசு சொல்கிறது. அவர்களைக் கண்டுபிடிப்பதற்காக எல்லா மக்களையும் கொடுமைப்படுத்துவது நியாயமா?

உரிய முறையில் விசாரணைகள் நடத்தி புலிகளைக் கண்டுபிடிக்கலாம். அதை விட்டுவிட்டு ஒட்டுமொத்த அகதிகளையும் கொடுமைப்படுத்தக் கூடாது.

இந்த மக்களை உடனடியாக மீள் குடியமர்த்துமாறு நான் பல தடவைகள் அரசிடம் நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளேன். ஆனால் அரசு எதனையும் கணக்கில் எடுக்கவில்லை.

இந்த மக்கள் உடனடியாக மீள் குடியமர்த்தப்படாவிட்டால், அகதிகள் மனதில் வைராக்கியம் வளரும். நாட்டின் பெயரும் கெட்டுப்போகும். ஆகவே உடனடியாக மக்கள் குடியமர்த்தப்படவேண்டும். எமது எம்.பிக்கள் அகதி முகாம்களுக்குச் சென்று அந்த மக்களைப் பார்வையிட அனுமதி வழங்கப்படவேண்டும். - என்றார். (அ-சி)

## அகதிகளின் மீள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு தெரிவித்துள்ளது.

மீள்குடியேற்ற மற்றும் அனர்த்தசேவைகள் அமைச்சு செயலாளர் யு.எல். ஹல்டீன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நிலக்கண்ணி வெடிகள் முற்றாக அகற்றப்படும் வரை எம்மால் மீள்குடியேற்றப் பணிகளை ஆரம்பிக்க முடியாது. நிலக்கண்ணி வெடிகள் முற்றாக அகற்றப்பட்டுவிட்டன என்பதை உறுதிப்படுத்தி சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் எமக்கு முதலில் அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அதன் பின்பே நாம் மீள்குடியேற்ற வேலைகளை ஆரம்பிப்போம். முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளன.

மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகளை மேற்கொள்வதற்கென விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணிக்குழு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கட்டடங்கள், வீதிகள், நீர்ப்பாசனக் கட்டமைப்புகள் ஆகியவற்றைத் நிர்ணயிக்கப்படும் பணியிலும்,மின்சார வசதிகள் உட்பட அடிப்படை வசதிகளை அங்கு ஏற்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளன. இவை அங்கு சிவில் நிர்வாகத்தை மீண்டும் அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆகும். ஆனால், வன்னி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் எப்போது மீள் குடியேற்றப்படுவார்கள் என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாது- என்றார்.

## தாழ்ந்த பிரதேச..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு வயோதிபர்கள் மழைக் குளிர் காரணமாக நேற்று மரணமானார்கள் என்றும் போதிய உணவு, குடிதண்ணீர் வசதி இன்றி பெரும் எண்ணிக்கையினர் நோய்வாய்ப்பட்டுள்ளனர் என்றும் முகாம்வாசிகள் தனக்குத் தெரிவித்தனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் கூறினார்.

முகாமுக்குச் செல்லும் வீதிகள் யாவும் வெள்ளக் காடாகக் காட்சி அளிப்பதால் வாகனங்கள் அங்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் இரண்டாவது நாளாக உணவு மற்றும் குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்..

ஆற்றில் இருந்து குழாய்கள் மூலம் வரும் கலங்கிய தண்ணீரை அவர்கள் குடிப்பதால் நோய்கள் பரவும் ஆபத்து உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

செட்டிக்குளம் மகாவித்தியாலயத்தில் சகலரும் இடம்பெயர்ந்து தங்கியுள்ளதால் அங்கு இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இவர்களை முகாம்களுக்கு வெளியே உள்ள பாடசாலைகளுக்கு மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் வாகனங்கள் அங்கு செல்ல முடியாததால் அந்த முயற்சி கைகூட வில்லை என்றும் மற்றொரு தகவல் தெரிவித்தது.

இதேவேளை, மேலும் நான்கு நாள்களுக்கு மழை தொடரும் என்று காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (அ-1)

வெளிநாட்டு அழைப்புக்கள் 3/- முகம் பார்த்துக் கதைப்பதற்கு
அஸ்வினி மலர் பிளாசா

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, அநேகமான அகதிகளை 180 நாள்களுக்குள் மீளக் குடியமர்த்த முடியும் என இலங்கைத் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

புதைக்கப்பட்டுள்ள பாரியளவு நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு சில காலம் தேவைப்படுவதால் சிறிதளவு கால தாமதம் ஏற்படக் கூடுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டும் முதல் கட்டமாகவே கடந்த எட்டாம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார் என மேலும் அறிய முடிந்தது.

## முகாம்களில் உள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை காரணமாக அங்குள்ள முகாம்களில் உள்ளவர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்த விடயம் குறித்து நேற்றுக்காலை ஜனாதிபதியின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷவுடன் கூட்டமைப்பின் எம்.பி. மாவை சேனாதிராசா தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அதன்போதே அரசிடம் மேற்கண்ட வேண்டுகோளை அவர் பஸிலிடம் விடுத்திருந்தார்.

அடை மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக முகாம்களில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலைகளையும் அசம்பாவிதங்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இரு வழிமுறைகள்தான் உள்ளன என்று மாவை எம்.பி. எடுத்துக் கூறினார்.

அகதிகள் தங்கள் சொந்த இடங்களுக்கு சென்று மீளக் குடியேற அனுமதிக்கப்பட வேண்டும். அல்லாவிடின் அவர்கள் உறவினர்கள் அல்லது நண்பர்களின் வீடுகளில் தங்குவதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும் - என்று பஸில் ராஜபக்ஷவுக்கு மாவை எம்.பி. வேண்டுகோள் விடுத்தார்.

PHYSICS
ENGLISH MEDIUM
BY:-
M.KARUNANITHY
(B.Sc SPECIAL)
1st Div Mon - Thu 7.30am
2nd Div Mon- Thu 9.00am
NEW EDUCATION WORLD
198, Point pedro Rd, Anippanthy

GEOGRAPHY
Paper Class
செவ் - வியாழ. 4.30-6.00
2010 A/L
* கடந்தகால வினாக்களும் மாதிரி வினாக்களும்
ஆரம்பம் - 18.08.2009
செவ் - 4.30
SCIENCE HALL

# நயினை - நல்லூர் பஜனை பாத யாத்திரை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 17

நயினை - நல்லூர் வருடாந்த திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை, நயினை நாக பூஷணி அம்பாள் ஆலயத்திலிருந்து இன்று காலை ஆரம்பமாகிறது.

அங்கு நடைபெறும் விசேட அபிஷேக பூசை வழிபாட்டின் பின்னர் வேல் பூசை நடத்தப்பட்டு வேல் எடுத்துச் செல்லப் படுவதுடன் பாத யாத்திரை ஆரம்பமாகும்.

குறிகட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம், வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக தேர்த்திருவிழா நாளான புதன்கிழமை (19 ஆம் திகதி) திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை நல்லூர்க் கந்தன் ஆலயத்தை வந்தடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை குறிகட்டுவான் மனோன்மணி அம்பாள் ஆலயம், புங்குடுதீவு சர்வோதயம் சிவயோக சுவாமிகள் தியான மண்டபம், ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம், புங்குடுதீவு பெருங்காடு மூத்தநயினார் புலம் சித்திவிநாயகர் ஆலயம், தென்பெருந்துறை சிவன் கோயில், ஆதிவயிரவர் ஆலயம், கிராஞ்சி மீனாட்சி சுந்தரேசர் ஆலயம் ஆகிய தலங்களில் பஜனை பாத யாத்திரை நடைபெறும். (அ)

# சாவகச்சேரி மகாகாளிக்கு இன்று சங்காபிஷேகம்

சாவகச்சேரி வாரிவனம் முத்துமாரி அம்பாள் ஆலய மகாகாளி அம்பாள் கலச சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் நூதன கும்பாபிஷேகம் கடந்த 4 ஆம் திகதி ஆரம்ப மாகி தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று அதன் நிறைவு விழா இன்று இடம்பெறும். அன் றையதினம் விசேட பூசைகள், வேத தோத்திர திருமுறைப் பாராயணம் ஒதுதல், மகேஸ்வர பூசை என்பன இடம்பெற உள்ளன.

இன்று பிற்பகல் 2 மணிக்கு தோத்திரப் பாடல் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட இருக்கிறது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் கலந்துகொள்வார். (1)

## கே.பி. மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோகம் செய்தமை, பயங்கரவாதத்துக்கு உதவிஒத்தாசை செய்தமை, தனிநாடு ஒன்றை ஸ்தாபிக்க முற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகள் முக்கியமானவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கே.பிக்கு எதிரான வழக்கை மூன்று பேர் கொண்ட மேல்நீதிமன்ற நீதிபதிகள் குழு விசாரிக்க உள்ளது என்றும் அரச வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்த வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னரே கே.பியை சர்வதேச உளவு நிறுவனங்கள் விசாரிப்பதற்கு அனுமதி வழங்குவது என்றும் அரசு தீர்மானித்துள்ளதாச் சொல்லப்படுகிறது.

## கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் விசேட அறிவித்தல்

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலதும் மற்றும் அங்கு எழுந்தருளி இருக்கும் மூர்த்திகளினது பெயர்களில் எழுதப்பட்ட ஆதனங்களினதும் புதிய குத்தகைப் பதிவு சம்பந்தமானது.

மேற்படி ஆலயத்துக்குச் சொந்தமான வயல், தோட் டக் காணிகளை குத்தகைக்கு செய்பவர்களின் குத் தகைகள் அனைத்தும் 28.02.2009 ஆம் திகதியுடன் முடிவடைந்தபடியால் 22.08.2009 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு மேற்படி ஆலய கோபுரவாசலில் குத்தகை எழுதப்படும். 2009 ஆம் ஆண்டின் புதிய குத்தகைக்கு அமைவாக கைதடி கமநல சேவை நிலையத்தின் நெற்காணி இடாப்பில் பதிவு செய்து உரமானியமும் வழங்குவார்கள். எனவே மேற்படி ஆலயத்திற்கு சொந்தமான சகல காணிகளையும் குத்தகைக்குச் செய்வோர் தவறாது குறிப்பிட்ட திகதியில் பதிவு செய்து கொள்ளவும்.

செயலாளர்.
நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபை
கைதடி வீரகத்திப் பிள்ளையார் முதலாய
கோயில்கள், கைதடி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர்:-
திரு.எஸ்.ரி.முனசிங்கா
குருநாகல்.

## விசேட புலமைப்பரிசில் பரீட்சை வெளியீடு - 06


Model Examination For Grade Five Students for Selection to School and for the
**Award of Bursaries, August 2009.**
மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும்
**புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஓகஸ்ட் 2009.**

**வினாத்தாள் - I** **நேரம்: 45 நிமிடங்கள்**


**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.**

* பின்வரும் பாடல்/ விவரணம் உணர்த்தும் பிராணியின் கீழ்க்கோடிடுக.


01. நான் ஒரு பிராணியாவேன். எனது உடலில் கறுப்பு, வெள்ளை நிறங்கள் உண்டு. மூங்கில் துளிர்களை மட்டும் உண்டு வாழ்வேன் நான்.





02. சுத்தம் தெருவில் செல்கின்றாய்
சிறந்த தொண்டன் ஆகின்றாய்
வண்ணக் குயில் குஞ்சுக்கு
வளர்ப்புத் தாயும் நீயாவாய்






* வித்தியாசமான உருவின் கீழ்க்கோடிடுக.

03.




04.




* அடுத்துவரும் படத்தின் கீழ்க்கோடிடுக.

05.



06.



* ஒரு சதுரக் கடதாசித்துண்டு ஒன்று நான்காக மடித்து துவாரமிடப்பட்டுள்ள விதம் தரப்படுகிறது. இதனை மீண்டும் விரிக்கும்போது தோன்றும் உருவின் கீழ்க்கோடிடுக.


07.



08.



* திசையை அடிப்படையாகக்கொண்டு விடை தருக.

09. அதிகாலையில் எழுந்து பாடசாலை சென்ற பாத்திமா தனது நிழல் தனது வலது கைப்பக்கம் விழுவதைக்கண்டாள் எனின், அவளது பாடசாலை எத்திசையில் அமைந்துள்ளது,
1) தெற்கு. 2) வடக்கு 3) கிழக்கு 4) மேற்கு.

10. மர்யம் A என்ற இடத்திலிருந்து ஆரம்பித்து B என்ற இடத்தை அடையும் வரையான பயணப் பாதையை படம் காட்டுகிறது. அவன் சென்ற வழியின் சரியான திசையைக் காட்டுவது,




1) மேற்கு → நிருதிமூலை → தெற்கு → ஈசான மூலை→ மேற்கு.
2) மேற்கு → நிருதி மூலை → தெற்கு → ஈசான மூலை → கிழக்கு.
3) கிழக்கு → நிருதி மூலை → தெற்கு → ஈசான மூலை → கிழக்கு.
4) கிழக்கு → ஈசான மூலை → தெற்கு → நிருதிமூலை → கிழக்கு.

* மிகச்சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

11. ஒரு பக்கம் 24 கட்டைகள் வீதம் முக்கோண வடிவின் காணி ஒன்றை மூடி வேலி அடைக்க எத்தனை கட்டைகள் தேவை?
1) 72 கட்டைகள். 2) 69 கட்டைகள்.
3) 68 கட்டைகள். 4) 62 கட்டைகள்.

12. ஒரு கோலத்தில் △○□◐▲ என்ற ஒழுங்கில் வடிவங்கள் காணப்பட்டன. 116 ஆவதாக காணப்படும் வடிவம் எது?





13. ரிம்தான், சிம்தா ஆகிய இருவரில் சிம்தா உயரமானவள். ஹமட், ரிம்தான் ஆகிய இருவரில் ரிம்தான் உயரமானவன். இவர்களில் மிக உயரமானவர் யார்?
1) ரிம்தான். 2) ஹமட். 3) சிம்தா. 4) யாவும் பிழை.

14. ஒரு வரிசையில் ரேகா நின்றாள். அவளுக்கு முன்னால் 24 பேர் நின்றனர். எனின், அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் நின்றனர்?
1) 24 2) 25 3) 29 4) கூறமுடியாது.


15. மழை பெய்யும்போது உடனடியாக நிகழக்கூடியது,
1) பயிர் செழிக்கும். 2) நிலம் நனையும்.
3) அதிகமாக விளையும். 4) வெள்ளம் ஏற்படும்.

16. காற்று வீசும்போது உடனடியாக நிகழக்கூடியது,
1) மரக்கிளை அசையும். 2) இதமாக இருக்கும்.
3) ஈர உடுப்பு உலரும். 4) பட்டம் விடுவர்.


17. மரங்கள், தென்னை மரங்களுக்கிடையிலான சரியான தொடர்பைக் காட்டுவது,




18. கணிதபாடத்தை மட்டும் விரும்புவோர் எத்தனை பேர்?
1) 58
2) 55
3) 32
4) 53




19. ரவியின் மனைவி சோபா. இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் என்பதனைக்காட்டும் படம்,




20. விஜயனின் நண்பன் அர்ச்சுனன் ஆவான். இதிலிருந்து அர்ச்சுனனின் நண்பன் விஜயன் என்பது,
1) சரி. 2) பிழை. 3) கூறமுடியாது.

* **பின்வரும் கூற்றுக்கள் ஏன் பிழை என எழுதுக.**

21. 2009.02.29 அன்று எனது பிறந்த நாள் என அப்ரின் கூறினாள்.

..................................................................................................


22. தென்னை மரத்தில் கூடு கட்டிய குயில் அதற்குள் முட்டையிட்டது.


..................................................................................................

23. தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் குமார் 208 புள்ளிகள் பெற்றான்.

..................................................................................................

* **பின்வரும் எண் கோலங்களை அவதானித்து விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

24.



25.



* **பின்வரும் சொற்களை உரிய முறையில் பிரித்து எழுதுக.**

26. மாலையா னதும்பற வைகள் கூடு நோக் கி விரைந் தன

..................................................................................................

27. இக் கரை மா ட்டு க்கு அ க்க ரைப்ப ச்சை

..................................................................................................

* **பின்வரும் கோவையைக் கொண்டு விடையளிக்குக.**


12 ♣ 3 = 4 # 1


28. இங்கு ♣ என்ற குறியீடு எதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது,
1) கூட்ட. 2) பெருக்க.
3) கழிக்க. 4) வகுக்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. இங்கு # என்ற குறியீடு எதற்கு பயன்படுத்தப்பட்டது,
   1) வகுக்க.　　　2) பெருக்க.
   3) கழிக்க.　　　4) கூட்ட.


* பின்வரும் தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.




30.  எதற்கு சமம்,
   1) 2400ml　　　2) 2700ml
   3) 3000ml　　　4) 1800ml

31. பின்வருவனவற்றில் சரியான தொடர்பு எது?
   1) 
   2) 
   3) 

மின் அலங்காரம் 1இல் உள்ள மின்குமிழ் பற்றிய தகவல்




32. இதன்படி அலங்காரத்தில் எந்நிற மின்குமிழ் அதிக எண்ணிக்கையில் உள்ளது,
   1) நீலம்.　　　2) சிவப்பு
   3) பச்சை　　　4) மஞ்சள்.

33. மின்குமிழ்களின் எண்ணிக்கையை கூடியதில் இருந்து குறைந்தது வரை ஒழுங்குபடுத்தும்போது வருவது,
   1) பச்சை, நீலம், சிவப்பு.　　　2) நீலம், பச்சை, சிவப்பு.
   3) பச்சை, சிவப்பு, நீலம்.　　　4) சிவப்பு, நீலம், பச்சை.

34. தரவின்படி மாத்தறைக்கும் புத்தளத்துக்குமிடையிலான தூரம் என்ன?
   1) 258km　　　2) 177km
   3) 203km　　　4) 213km

35. 2009ஆம் ஆண்டு என்பது குறிக்கும் விடையின் கீழ்க்கோடிடுக.
   1) 20ஆம் நூற்றாண்டின் 9ஆம் தசாப்தம்.
   2) 20ஆம் நூற்றாண்டின் 10ஆம் தசாப்தம்.
   3) 21ஆம் நூற்றாண்டின் 1ஆம் தசாப்தம்.
   4) 21ஆம் நூற்றாண்டின் 9ஆம் தசாப்தம்.

தூரம் km

| | | | புத்தளம் |
|---|---|---|---|
| கொழும்பு | | | 152 |
| காலி | | 126 | |
| மாத்தறை | 55 | 181 | |

* தரப்படும் தொடர்பை அவதானித்து சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

36. நரி - தந்திரம்.
   1) யானை - ஒற்றுமை.　　　2) நாய் - வேகம்.
   3) பூனை - வீழ்படிவு.　　　4) கவரி மான் - மானம்.

37. பணம் - வட்டி
   1) துக்கம் - வெள்ளை.　　　2) வீடு - வாடகை.
   3) சித்திரை - வைகாசி.　　　4) வியாழன் - வெள்ளி.

* சரியான விடையினை எழுதுக.

38. பருவத்தில் பயிர் செய் என்பதற்கு பொருத்தமான பழமொழி,
.................................................................................................

39. அங்கையற்கண்ணி அழகம்மாவிலும் அழகிற் கூடியவள். ஆனால், மங்கையர்க்கரசியிலும் அழகிற் குறைந்தவள் எனின், இவர்களில் அழகிற் கூடியவர் யார்?..............................................

40. கண்ணன் பொன்னனிலும் உயர்ந்தவன். கோபாலன் கண்ணனிலும் உயரமானவன் எனின், இவர்களில் மிக உயர்ந்தவர் யார்?
..........................................................

## வினாத்தாள் - II　　　நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.

01. பின்வரும் பந்தியை கவனமாக வாசித்து விடை தருக.

டெங்குக்காய்ச்சல் வைரஸ் கிருமியினால் தொற்றும் ஒரு நோயாகும். ஈடிஸ் வகை நுளம்புகளினாலேயே இது வேகமாக பரவுகிறது. இதனால் பரவலாக சின்னஞ்சிறு பாலகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பெற்றோர்கள் தத்தமது குழந்தைகளின் ஆரோக்கியத்துக்காக பல பொதுப்பணிகளில் ஈடுபட்டு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை அழித்து விட்டனர். சிரமதானம் மூலம் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக பல பக்கமும் காணப்பட்ட குப்பைகள், யோக்கட் கோப்பைகள், வெற்றுத்தகரடப்பாக்கள் இல்லாமலாக்கப்பட்டுள்ளன. இதனால் நுளம்புப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டு டெங்கு நோயின் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாலகர்கள் ஒடியாடி விளையாடினர்.

01) டெங்கு நோயை ஏற்படுத்தும் நுண்ணங்கி எது?
.................................................................................................

02) டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு எது?
.................................................................................................

03) டெங்கு நுளம்பு எவ்வேளையில் மனிதர்களைத் தாக்கும்?
.................................................................................................

04) பல பக்கமும் என்பதைக் குறிக்கும் இணைமொழிச்சொல் எது?
.................................................................................................

05) பந்தியில் உள்ள உயர்திணை, பன்மை, பலர்பால் பெயர்ச்சொல் ஒன்று தருக.
.................................................................................................

06) நுளம்புகளினாலேயே என்பதன் ஒருமைச்சொல் யாது?
.................................................................................................

07) சின்னஞ்சிறு என்பதன் எதிர்ச்சொல் எது?
.................................................................................................

08) நோய் என்பதைக்குறிக்கும் ஒத்தகருத்து சொல் ஒன்று தருக.
.................................................................................................

09) பந்தியில் உள்ள இணைமொழிச்சொல் எது?
.................................................................................................

10) பந்தியில் உள்ள வினையடைமொழிச்சொல் எது?
.................................................................................................

02. பின்வரும் கருத்தைத் தரும் பழமொழியினை எழுதுக.
   1) கோபம் சிந்தனைக்கு இடையூறாக இருக்கும்.
   .................................................................................................
   2) திறமையுள்ளவன் எதைக்கொண்டும் முன்னேறிவிடுவான்.
   .................................................................................................
   3) எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும்.
   .................................................................................................
   4) உத்தம நட்பு.
   .................................................................................................

03. பின்வருவன மூலம் உணர்த்தப்படும் விடயத்தை எழுதுக.
   1) ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
   நற்றவ வானிலும் நனி சிறந்தனவே''
   .................................................................................................
   2) சீரைத் தேடின் ஏரைத்தேடு.
   .................................................................................................
   3) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
   .................................................................................................
   4) ஐயம் இட்டு உண்டு.
   .................................................................................................

04. இடைவெளிக்கு பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.
   1) மத்திய மலைநாட்டில் .............................. மூடியிருந்ததால் கடுங்குளிராக இருந்தது. (பனி, பணி)
   2) தாய், தந்தையைப் .............................. என்பது முதுமொழி ஆகும். (பேன், பேண்)
   3) .............................. மப்பும் மந்தாரமுமாக இருண்டு காணப்பட்டது. (வானம், வாணம்)
   4) அவ்விடத்தில் அள்ள அள்ளத் தண்ணீர் .............................. க் கொண்டே இருந்தது. (ஊறி, ஊரி)

05. பொருத்தமான நிறுத்தற்குறி இடுக.
   1) ஐயோ பாவம் இவன் நல்லவனாயிற்றே
   2) புயல் காற்று ஊ .......... ஊ .......... என இரைந்தது

06. விரித்து எழுதுக.
   1) இ. பெ. கூ. - ..........................................................
   2) இ. ஒ. கூ. - ..........................................................

07. பின்வரும் மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.
   1) ஓட்டை வாயன்
   .................................................................................................
   2) காதுகுத்துதல்
   .................................................................................................

08. பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக்குக.
   1) அரசன் திருடனைக் கண்டான்.
   திருடன் அரசனைக் கண்டான்.
   .................................................................................................
   2) பசு அழைத்தது.
   கன்று ஓடிற்று.
   .................................................................................................

09. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.
   1) தவம ஆவே நே,
   .................................................................................................
   2) அ(த்) தன புட்டுவ திபே
   .................................................................................................

10. பின்வரும் தமிழ் சொற்களின் சிங்கள உச்சரிப்பை தமிழில் எழுதுக.
   1) பகலாகிக் குளிக்கவும்
   .................................................................................................
   2) ரூபா முப்பத்தைந்து

09 ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org